விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## சங்குநாதம்

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

சங்கு 26
ஒலி 094 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 09 ஞாயிற்றுக்கிழமை (23.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உள்ளே
உங்கள் சங்குநாதத்தில்...!
உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருவிழா

தெளிவே என் சிந்தனையுள்
விண்தொட்ட வீரமங்கை மண்தொட்ட மகிமை
ஆலடி மாநாடு

ஆச்சி அறிவுரை
மனிதன் வாழத் தகுதியற்ற இடமாகிறது பூமி
எமக்கு ஏற்படும் கோபத்தை என்ன செய்வது?
வியாசர் கேள்வி - பதில்கள்

இன்னும் பல சிறப்புக்களுடன்...!
வா சகர்களே சிக்கத் தவறாதீர்கள்

# தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையே மீண்டும் கப்பல் சேவை

## இந்திய ஊடகங்கள் செய்தி வெளியீடு

(கொழும்பு)

தலைமன்னாருக்கும் - இராமேஸ்வரத்துக்கும் இடையே மீண்டும் கப்பல் சேவை ஆரம்பமாக வுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையிலுள்ள தலைமன்னாருக்கு தனுஷ்கோடியிலிருந்து 1914ஆம் ஆண்டு பயணிகள் கப்பல் போக்குவரத்து

23ஆம் பக்கம் பார்க்க

## மாத்தறையில் இளைஞர்கள் இருவர் சுட்டுக்கொலை

(மாத்தறை)

மாத்தறை தெவிநுவர ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் தெற்கு வாஹல்கடவிற்கு முன்பாக உள்ள சிங்காசன வீதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க

## ஐஸ் போதைப்பொருளுடன் யாழில் யுவதி கைது

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் இருபாலை இந்து மயானத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் யுவதி ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இருபாலை இந்து மயானத்தில் சந்தேகத்திற்கிட

23ஆம் பக்கம் பார்க்க

# அவசியம் ஏற்பட்டதால் ஆயுதம் ஏந்தினோம்

## ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் ஆயுதம் ஏந்தினோம் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார் .

(23ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவிலில் விபரீத முடிவெடுத்த சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவிலில் விபரீத முடிவெடுத்த

23ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் சிறைக் கைதி தப்பியோட்டம்

(வவுனியா)

வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் நேற்றுச் சனிக்கிழமை சிறைச்சாலை

23ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க புதிய செயலி அறிமுகம்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கான புதிய கையடக்கத் தொலைபேசி செயலி நேற்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவில் இந்தச் செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.

தேர்தல் முறைப்பாடுகளை முறையான மற்றும் புதிய தொழில்நுட்ப முறைகள் மூலம் சமர்ப்பிப்பதை எளிதாக்கும் வகையில் EC EDR என்ற தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## போத்தலில் இருந்த டீசலை சோடா என நினைத்து அருந்திய குழந்தை மரணம்

### ஊர்காவற்துறையில் சோகம்

(யாழ்ப்பாணம்)

போத்தலிலிருந்த டீசலை சோடா என நினைத்து அருந்திய ஒரு வயதும் 9 மாதமும் நிரம்பிய ஆண்குழந்தை ஒன்று

23ஆம் பக்கம் பார்க்க

## ஹெரோயின் ஐஸ் போதையுடன் பரந்தனில் மூன்று பேர் கைது

### மோ.சைக்கிள், 4 கையடக்கத் தொலைபேசிகள் மீட்பு

(கிளிநொச்சி)

பரந்தன் குமரபுரம் பகுதியில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் மூன்று பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 20.7 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 5 கிராம் 75 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் விபத்து

### ஒருவர் பலி ; மூவர் படுகாயம்

(மன்னார்)

மன்னாரில் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மன்னார் பள்ளமடு பெரியமடு பிரதான வீதியில் நேற்று சனிக்கிழமை

23ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரகம் தேவை

AB+ குருதி வகையான சிறுநீரக நோயாளிக்கு உடன் சிறுநீரகம் தேவை. எந்த வகையான சிறுநீரகமும் பொருத்தலாம். சிறுநீரகம் தானம் செய்யும் ஆண், பெண் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (948)

**077 725 7159 / 077 008 3390**

## காணியும் வீடும் விற்பனைக்கு

கொழும்பு - 06 பலபொக்குண விகாரைக்கு அருகாமையில் 10.5 பேர்ச் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. (3723)

தொடர்பு : **077 390 1877**

## திருவள்ளுவர் விழா

அகில இலங்கை திருவள்ளுவர் மன்றம். உரும்பிராய் கற்பக விநாயகர் கலாசார மண்டபத்தின் அனுசரணையுடன் நடத்தும் "திருவள்ளுவர் விழா"-2025 இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு உரும்பிராய், பலாலி வீதியில் அமைந்துள்ள கற்பக விநாயகர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகவும் கோப்பாய் பிரதேச செயலர் சிவஸ்ரீ சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (நி-8)

## விற்பனைக்கு

கட்டட இடிபாடுகள், கடைக் கதவுகள் மூன்று, வீட்டுக் கதவுகள் மூன்று, நிலைக் கதவுகள், ஓடுகள் என்பன விற்பனைக்குண்டு. (C-2521)

**077 723 2535**

## விற்பனைக்கு!

**TATA Ace Zip (குட்டி யானை )**

சிறிய அளவிலான தொழில் முனைவோருக்கு பொருத்தமானது. நல்ல நிலை & "TATA சேவை மையம்", அரியாலையில் பராமரிக்கப்பட்டது. புதிய டயர்கள், குறைந்த மைலேஜ். ஒற்றை உரிமையாளர். (954)

தொடர்பு : **0770 780 240**

## காணி விற்பனைக்கு (40 பரப்பு)

வசாவிளான் அச்சுவேலி வீதியில் சீர்திருத்தப் பாடசாலை மற்றும் சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு செல்லும் காப்பெற் வீதியில் கம்பி வேலியினால் சுற்றி அடைக்கப்பட்ட 3 அறை வீடு வெட்டுக் கிணற்றுடன் கூடிய தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. (3729)

**075 696 6957**

## பணியாளர் தேவை

- தொழில்நுட்ப அலுவலர் NDT, HNDE, NCT
- கட்டட மேற்பார்வையாளர் (ஆண், பெண்)
- அலுவலக உதவியாளர் (பெண்)

RUDRAM ENGINEERING (PVT) LTD
UDUVIL, JAFFNA. (948)

**: 077 649 8548**

## பணியாளர் தேவை

விடத்தல்பளையில் அமையப்பெற்ற இராஜேஸ்வரி அக்ரோ நிறுவனத்திற்கு தங்கி நின்று பணிபுரிய அனுபவமுடைய ஆண் பணியாளர் தேவை. (3726)

**077 076 7114**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எம் பள்ளிதனில் சேவையாற்றி எம் இதயந்தனைக் கவர்ந்து தன் துறைசார்ந்த கல்வியில் (கிறிஸ்தவம்) முதுகலைமாணிப் பட்டத்தினைப் பெற்ற எம் முன்னைநாள் ஆசிரியை

**திருமதி றெஜிடனியலா சாம்சன்றெக்ஸ் (NDT, BEd, MA)**

அவர்கள் மேலும் பல பட்டம் பெற்று மேன்மையுற வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்...
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் பாடசாலைச் சமூகம்.(2025) (951)

## தேவை

யாழ்.நகரில் உள்ள ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (3722)

தொடர்புகளுக்கு **077 777 0916**

## தேவை

Show Room ஒன்றிற்கு விசாலமான களஞ்சியசாலை தேவை. யாழ். நகரிற்குள் விரும்பத்தக்கது. (3731)

தொடர்புகளுக்கு **076 821 9414**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் B.A பட்டம் பெற்ற

**திருமதி ஞானரூபா சுதன்**

(ஆசிரியர் – யா/புனிதநகர் தமிழ் வித்தியாலயம், கற்கோவளம்)

அவர்களைப் பாராட்டி மேலும் பல பட்டங்கள் பெற்று இன்புற்று வாழ வல்லிபுர மாயவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
அப்பா : மு.சற்குணநேசன் (வல்லிபுர மாயவன் ஓதுவார்)
அம்மா : ச.ருக்மணிதேவி
றெமஸ் குடும்பம்
முகுந்தன் குடும்பம்
சுதன் குடும்பம்
முகுந்தவேள் குடும்பம்

கற்கோவளம்,
பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்

### வெற்றிவேலு சுப்பிரமணியம் [சிவம் ஐயா]



பிறப்பு : 1951.03.20 இறப்பு : 2025.03.22

வரணி கரம்பைக்குறிஞ்சி மேற்கு, குருக்கள் குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு சுப்பிரமணியம் (சிவம் ஐயா) அவர்கள் நேற்று 22.03.2025 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான வெற்றிவேலு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் அமரர்களான தம்பிப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் அமரர் இரத்தினம்மா, மகாலிங்கசிவம், தில்லையம்பலக் குருக்கள் (மிருசுவில் மன்னன்குறிச்சி கந்தசாமி ஆலய பிரதம குரு) ஆகியோரின் சகோதரனும் கருணாகரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சாவகச்சேரி), (அமரர்) கருணாநிதி, பாஸ்கரன் (ஆசிரியர்- வவுனியா கல்லாறு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம்), ஸ்ரீகரன் (பதிவாளர், நீதவான் நீதிமன்றம் பருத்தித்துறை), கார்த்திகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநலசேவைகள் நிலையம், சாவகச்சேரி), சரணியா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - தொழில் பயிற்சி நிலையம் கிளிநொச்சி), பாலகரன் (உரிமையாளர் - ஸ்ரீகருணா மல்ரிசொப் வரணி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அனுஷா, ரூபா (கனடா), கவிதா (ஆசிரியர் - வவுனியா நெழுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம்), அபிராமி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சாவகச்சேரி), திருமாறன் (உரிமையாளர் - ஸ்ரீகருணா மல்ரி சொப் வரணி), நிரஞ்சன் (கிராம உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் நீலகண்டக் குருக்கள் லலிதாம்பிகை, தவறஞ்சினி, அமரர் ஞானனேஸ்வரி, அமரர் நாகேஸ்வரி, (அமரர்) வைரவநாதன், செவ்வந்திநாதன் (பிரான்ஸ்), சிவசெந்திநாதன் (பிரதம கணக்காளர் - திறைசேரி கிழக்கு மகாணம்) ஆகியோரின் மைத்துனரும் நந்தகோகுலன், அகல்யா, ஹிருணிகா, அஸ்விகா, விஹானா, அஹர்வின், தஸ்விகா, டிருசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை வரணி கரம்பைக் குறிச்சி மேற்கு குருக்கள் குடியிருப்பு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப.10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக தறளப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கரம்பைக்குறிஞ்சி மேற்கு,
வரணி குருக்கள் குடியிருப்பு. (C-2520)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த வருடத்தில் மட்டும்

# காசநோயினால் யாழில் 30 பேர் உயிரிழப்பு!

### விழிப்புணர்வு நடைபவனிக்கு யாழ். மார்பு நோய் சிகிச்சை நிலையம் அழைப்பு

**(கொழும்பு)**

**காச நோயினால் கடந்த வருடத்தில் மட்டும் சுமார் 30 பேர் வரை யாழ். குடாநாட்டில் உயிரிழந்துள்ளதாக யாழ். மார்பு நோய் சிகிச்சை நிலையம் தெரிவித்துள்ளது.**

உலக காச நோய் தினத்தை முன்னிட்டு வழங்கப்பட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இது ஒரு தொற்று நோய் ஆகும். Tubercle bacilli எனப்படும் பக்றீரியாவினால் ஏற்படுகிறது.

உலகில் நான்கில் ஒரு பங்கான மக்கள் காசநோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர். இவர்களில் ஒவ்வொரு வருடமும் 10 மில்லியன் பேர் காசநோயாளிகளாக வருகின்றார்கள்.

யாழ் குடாநாட்டைப் பொறுத்த வரையில் வருடாந்தம் 250 முதல் 300 வரையான காச நோயாளிகள் இனங் காணப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகின்றனர். எனவே வருடாந்தம் 50 முதல் 100 வரையான காசநோயாளிகள் இனங் காணப்படாது சமூகத்தில் விடுபடுகின்றனர்.

காசநோயானது சுவாசப்பையையே பிரதானமாகப் பாதிக்கும். என்றாலும் உடலின் எந்தப் பகுதியையும் பாதிக்கலாம். கடந்த ஆண்டில் இனங்காணப்பட்ட 260 பேரில் 200 பேர் சுவாசப்பைப் பாதிப்பையும் ஏனைய 60பேர் நிணநீர் முடிச்சுகள், சுவாசச்சுற்றுச் சவ்வு, மூளை, முண்ணான், கண், இதயச் சுற்றறை, சிறுநீரகம், குடல், குடல்சுற்றுச்சவ்வு, முள் என்பு, மூட்டுக்கள், தசை, தோல், விதை, கருப்பை ஆகிய பகுதிகளில் காச நோயால் பாதிக்கப்பட்டவர்களாக இனங்காணப்பட்டனர்.

சிகிச்சை ஆரம்பிக்கப்படாத காசநோயாளிகளால் வருடத்திற்கு 10 முதல் 15 பேர் தொற்றுக்கு ஆளாவார்கள். அத்துடன் சிகிச்சை உரிய நேரத்தில் ஆரம்பிக்கப்படாது விடின் பாதிக்கப்பட்ட சுவாசப்பையும் உடல் உறுப்பும் நிரந்தரமாகப் பழுதடைந்து விடும். இதனால் உயிர் ஆபத்தும் ஏற்படலாம். கடந்த வருடம் 30 பேரளவில் யாழ் குடாநாட்டில் காச நோயால் உயிரிழந்துள்ளனர்.

காச நோயானது தொடர்ச்சியான மருத்துவ சிகிச்சையினால் முற்றாக குணமாக்கக் கூடியது. காச நோய்த்தொற்றுக்குள்ளான வரை ஆரம்பத்திலே இனங்கண்டால் சிகிச்சை மூலம் தடுக்க முடியும்.

இரண்டு கிழமைக்கு மேல் தொடர்ச்சியான இருமல், சளி மற்றும் நிறை குறைவு ,பசிக்குறைவு உள்ள எவரும் சளிப் பரிசோதனையும் சுவாசப்பை கதிர் வீச்சுப் படத்தையும் (Chest Xray) எடுப்பதன் மூலம் சுவாசப்பை தொடர்பான காசநோயை இனங்காணலாம். இப் பரிசோதனைகள் காச நோய் சிகிச்சை நிலையம், யாழ் போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலை ஆகியவற்றில் செய்யலாம்.

இது தொடர்பாக எமது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக உலக காசநோய் தினமான மார்ச் 24 காலை 7 மணிக்கு மாபெரும் நடைபவனி யாழ். போதனா வைத்தியசாலையில் ஆரம்பித்து, பண்ணையில் உள்ள காச நோய் சிகிச்சை நிலையத்தை நோக்கி நடைபெறவுள்ளது. இதில் சுகாதார ஆர்வலர்கள் அனைவரும் பங்கு பற்றுமாறு அழைக்கப்படுகின்றனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# ஆசிரியர் சேவை நியமனம் 28 வரை விண்ணப்பிக்கலாம்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய கற்பித்தல் டிப்ளோமாதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவைக்கு நியமனம் செய்தல் தொடர்பில் கல்வி அமைச்சால் அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் 2020 முதல் 2022 வரையான வருடங்களில் பாடநெறிகளைத் தொடர்ந்த பயிலுநர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான தகவல்கள் நிகழ்நிலை முறைமை மூலமாகச் சேகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய teacher.moe.gov.lk ஊடாக, எதிர்வரும் 28 ஆம் திகதி வரையில் குறித்த பயிலுநர் இதற்காக விண்ணப்பிக்க முடியும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளமான www.moe.gov.lk இற்கு பிரவேசித்து மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)


# மீண்டும் கைகோர்த்த பிள்ளையான் - கருணா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உருவாக் கப்பட்ட "கிழக்கு தமிழர் கூட்டமைப்பு" என்னும் புதிய கூட்டமைப்பில் கருணா அம்மான் என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் வி.முரளீதரன் மற்றும் பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் இணைந்து கொண்டதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று சனிக்கிழமை மட்டக் களப்பு றிவோரா ஹோட்டலில் கைச்சாத்தானது.

இதனையடுத்து நடக்க விருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் படகு சின்[illegible] களமிறங்கியு[illegible] (நி-8)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியை அழைப்பும்



மண்ணில் 17 * 06 * 1939

விண்ணில் 23 * 02 * 2025

அமரர். தம்பிப்பிள்ளை நாகேஸ்வரி

கடந்த 23.02.2025 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் தம்பிப்பிள்ளை நாகேஸ்வரி அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 25.03.2025 செவ்வாய்க்கிழமை இடம்பெற இருப்பதனால் அத்தருணம் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்

பிள்ளைகள்

த.பாலரத்னம், த.மோகனலோஜினி, த.ஜெயபாலமனோகரன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(944)

[illegible]ரம், [illegible]யிருப்பு.

தொடர்பு 074 078 9468


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## (29.03.2025-03.06.2027)

## முன்வைத்த காலை பின் வைக்காமல் வெற்றி நடைபோடும் சிம்மராசி நேயர்களே!



29.03.2025 அன்று சனி பகவான் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு மாறுகிறார். மீன ராசிக்கு வரும் சனி பகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை காலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார். மீன ராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி ராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு ராசியையும் பார்க்கிறார்.




**சிம்மம்:** முன் வைத்த காலை பின் வைக்காமல் வெற்றி நடை போடும் சிம்ம ராசி நேயர்களே! நீங்கள் யாரையாவது நம்பி விட்டால் வாரி வழங்கி விடுவீர்கள். எடுத்த முடிவில் இருந்து சிறிதும் இறங்கி வர மாட்டீர்கள். எந்த விதமான சிரமங்களையும் சமாளித்து வாழ்வில் வெற்றிக் கனியை பறிப்பீர்கள். கொஞ்சம் கர்வம் உடையவர்கள் நீங்கள். இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப் போகிறது என்பதைப் பார்ப்போம்.

**கிரகநிலை:** இதுவரை உங்களது களத்திர ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி அஷ்டம ஸ்தானத்திற்கு செல்கிறார். மூன்றாம் பார்வையால் தொழில் ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:** இதுவரை இருந்த கடினமான சூழ்நிலையிலிருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தில் உற்சாகம் கரை புரளும். புத்திரர்களாலும், பேரப்பிள்ளைகளாலும் மகிழ்ச்சி ஏற்படும். உயர்ந்த பதவிகள் உங்களைத் தேடி வரும். சமுதாயத்தில் உயர்ந்தோரின் நட்பும், ஆதரவும் கிடைக்கும். செய்தொழிலை விரிவுபடுத்த பெரிய அளவில் கடன் வாங்குவீர்கள். அதேநேரம் அனைத்து விவரங்களையும் நன்றாகப் புரிந்து கொண்ட பிறகே ஆவணங்களில் கையொப்பமிடவும். மனஅழுத்தம் குறைந்து தெளிவாகச் சிந்திக்கும் காலமிது என்பதால் உங்களுடைய உள்ளம் தெளிவான வழிகளிலேயே இட்டுச் செல்வதற்கு வாய்ப்புகள் அதிகம்.

வம்பு, வழக்குகளிலிருந்தும் விடுபட்டு புதிய மனிதனாக ஆவீர்கள். ஆன்மீகத்தில் புதிய விடயங்களை அறிந்து கொள்வீர்கள். தர்ம காரியங்களுக்குச் செலவு செய்வீர்கள். பொருளாதார வளம் சலசலப்பாக இருந்தாலும் புதிய வீடு, வாகனம், ஆடை, ஆபரணங்களை வாங்குவீர்கள். சில நாட்களாக இழுபறியாக இருந்த

உங்கள் சகோதர வழியில் சில அனுகூலங்கள் உண்டாகும். நண்பர்களிடம் மன உறுதியுடன் தெளிவாகப் பேச வேண்டும். உங்களைப் பற்றி புறம் பேசும் நபர்களை அடையாளம் கண்டு, அவர்களிடமிருந்து நாசூக்காக விலகுவதே நல்லது.

கையிருப்புப் பொருட்களையும், பணத்தையும் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும். மேலும் குறுக்கு வழியில் எந்தச் செயலையும் செய்ய நினைக்க வேண்டாம். எந்த வேலையை எடுத்தாலும் உறுதியான எண்ணத்துடன் பணியாற்ற வேண்டும். நீங்கள் சார்ந்திருக்கும் துறையில் நன்றாகவே முன்னேறுவீர்கள். சிலருக்கு நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் சூழ்ச்சிகளில் சிக்கும் சூழல் ஏற்படலாம்.

அரசாங்கம் வாயிலாக சிறு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அவை விரைவில் மறைந்துவிடும். வெளியூர் அல்லது வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். புதிய அனுபவங்களைப் பெறுவீர்கள். உங்கள் மனவலிமை அதிகரிக்கும். உங்கள் செயல்களில் சுறுசுறுப்பு கூடும். உங்களை நீங்களே அறிந்து கொண்டு சமுதாயத்திற்குப் பயன்படுவீர்கள். தெய்வ வழிபாட்டிற்குத் தக்க பலன் கிடைக்கும். உங்களின் காரியங்களைப் பொறுமையாகவும், அமைதியாகவும் செய்து முடிப்பதே சிறந்தது.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கத் தொடங்கும். உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெறுவதில் தடை ஏற்படாது. ஆனாலும் சக ஊழியர்கள் உங்களிடம் பொறாமை கொள்ளலாம். எடுத்த காரியங்களில், சில சந்தர்ப்பங்களில் காலதாமதம் ஏற்படலாம். உடலில் சோர்வும், மனதில் தெளிவின்மையும் கூட உண்டாகலாம். ஆனால் இவற்றை மீறி சனி கௌரவமான பதவிகளை வழங்குவார். இதனால் உங்களுக்கு உறுதுணையாக இருந்து வந்த மேலதிகாரிகளின் ஆதரவு சற்று குறையக் கூடும். உங்களின் கடமைகளை பதற்றப்படாமலும், நிதானத்துடனும் செய்தால் எந்தச் சரிவுக்கும் ஆளாகாமல் தப்பிக்கலாம்.

வியாபாரிகள் நல்ல பொருளாதார வளத்தைக் காண்பீர்கள். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் மறையும். கூட்டாளிகளிடம் ஒற்றுமை உண்டாகும். வங்கிக் கடன்கள் சிக்கலின்றி கிடைக்கும். உங்கள் முயற்சியில் சுறுசுறுப்பு உண்டாகும். வாணிப வட்டாரத்தில் உங்கள் மதிப்பு, மரியாதை உயரும். புதிய முதலீடுகளில் ஈடுபட்டு இலாபத்தைக் காண்பீர்கள்.

அரசியல்வாதிகளின் பதவிகளுக்கு நெருங்கிய நண்பர்கள் மூலமாகவே சில இடையூறுகள் ஏற்படலாம். அதனால் எவரிடமும் மனம் திறந்து பேச வேண்டாம். தொண்டர்கள் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பதால் உற்சாகமடைவீர்கள். உங்கள் செயல்களை நேர்த்தியாகச் செய்வீர்கள். பண வரவும் நன்றாகவே இருக்கும்.

கலைத்துறையினர் சுமாரான வாய்ப்புகளையே பெறுவீர்கள். ரசிகர்களின் ஆதரவும் எதிர்பார்க்கும் அளவுக்கு இருக்காது. புகழைத் தக்க வைத்துக்கொள்ள சீரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். உழைப்பை அதிகப்படுத்திக்கொண்டு, கர்வத்தை விட்டொழித்துத் திறந்த மனதுடன் இயங்கினால் புகழ் பெறலாம். சக கலைஞர்களுடன் உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் சில முடிவுக்கு வரும்.

பெண்கள் குழந்தைகளால் சந்தோஷம் அடைவீர்கள். கணவருடனான ஒற்றுமை நன்றாகவே இருக்கும். உங்களின் புத்திசாலித்தனத்தை குடும்பத்தினர் புகழ்வார்கள். புத்தாடை, அணிகலன்களை வாங்கி மகிழ்வீர்கள். விருந்து மற்றும் விழாக்களில் கலந்துகொண்டு உற்சாகம் அடைவீர்கள். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். பொருளாதாரம் சிறப்பாக இருப்பதால் சேமிப்பு விடயங்களில் கவனம் செலுத்துவீர்கள்.

மாணவர்கள் கல்வியில் மிகுந்த ஈடுபாடு காட்டுவீர்கள். பெற்றோர்களின் ஆதரவும் தொடர்ந்து நல்லவிதமாக இருக்கும். வெளிவிளையாட்டுகளில் ஈடுபட்டு வெற்றி அடைவீர்கள்.

**மகம்:** உத்தியோகத்தர்களுக்கு நிதானம் தேவை. சக ஊழியர்களுடன் சாமர்த்தியமாக பழகி காரிய அனுகூலம் அடைவீர்கள். குடும்ப விவகாரங்களில் சாமர்த்தியமாக நடந்து கொண்டு எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். கணவன், மனைவிக்கிடையே மனம்விட்டு பேசுவது கருத்து வேற்றுமை ஏற்படாமல் தடுக்கும்.

**பூரம்:** பிள்ளைகளிடம் கோபமாக பேசாமல் அன்பாக பேசுவது நல்லது. வாகன வசதி உண்டாகும். அடுத்தவர்களிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். நீண்ட தூர தகவல்கள் நல்லவையாக இருக்கும். எதிலும் நிதானம் தேவை.

**உத்திரம் 1 ஆம் பாதம்:** பணவரத்து தடைபடும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். கவனம் தேவை. கெட்டகனவுகள் வரும். அதிக கோபத்தால் வீண் பகை உண்டாகலாம். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது.

**பரிகாரம்:** தினமும் அருகிலிருக்கும் சிவன் கோவிலுக்குச் சென்று சிவதரிசனம் செய்து வரவும். திரியம்பகம் என்று ஆரம்பிக்கும் மிருத்யுஞ்சய மந்திரத்தை பாராயணம் செய்யவும். வில்வ இலைகளை சிவனுக்கு சாத்திவர தீமைகள் அகலும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 39 ஆவது பட்டமளிப்பு வைபவத்தில் முதல்நாள் முதல் அமர்வில் திருமதி.கௌரி சண்முகலிங்கம் கல்வியியலில் கலாநிதிப்பட்டம் பெற்றுக்கொண்டார்.

# AI தொழில்நுட்பத்தில் உருவான முதல் செய்தித்தாள்

(வத்திக்கான்)

கணனித் துறை மட்டுமின்றி கல்வி, மருத்துவம், இராணுவம் என எல்லா துறைகளிலும் AI பயன்பாடு அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் இத்தாலியிலிருந்து வெளியாகும் இல்ஃபோக்லியோ, நாளிதழ் நிறுவனம், முழுவதும் AI தொழில்நுட்பத்தில் தயாரான நாளிதழை விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளது. செயற்கை நுண்ணறிவால் முழுமையாகத் தயாரிக்கப்பட்ட பதிப்பை வெளியிடும் உலகின் முதல் செய்தித்தாள் இது என இத்தாலிய செய்திகள் தெரிவிக்கின்றன.

நான்கு பக்கங்களைக் கொண்ட இல் ஃபோக்லி யோ AI செய்தித் தாளானது மெல்லிய அகலத் தாள் பதிப்பில் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் இச்செய்தித் தாளை இணையதளத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் சர்வ தேச ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 300 கிலோவிற்கும் அதிகமான கஞ்சா யாழில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தும்பளை மூர்க்கன் கடற்கரைப் பகுதியில் வைத்து 154 பொதிகளில் 300கிலோவிற்கும் அதிகமான கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வாளர்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இராணுவம் மற்றும் கடற்படையினரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது, மீன்பிடிப் படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

பருத்தித்துறை பொலிஸ் தலைமை அதிகாரி சம்பவ இடத்திற்கு நேரடியாக வருகைதந்து குறித்த விடயத்தை ஆராய்ந்ததுடன் கைப்பற்றப்பட்ட பொருட்களை பருத்தித்துறை நீதவான் நீதி மன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு பெருந்தொகை கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



(நி-8-33)

# யாழ்ப்பாண கம்பன் விழா

## ஒரு விமர்சனப் பார்வை

நயினை.கி.கிருபானந்தா
பொருளாளர்,
யாழ்ப்பாண கம்பன்கழகம்.

(நேற்றைய தொடர்ச்சி)

ஒரு தலைமுறையையே தன் பேச்சுத் திறமையினால் கட்டிப் போட்டவர் 3-500 வருடங்களுக்கு முன்னால் சுட்ட மண்ணில் எழுதப்பட்ட எழுத்துதான் தமிழை மூத்த மொழி என்று அறிய உதவியது என்று அவர் கூறியது மெய் சிலிர்த்தது.

"பட்டி மண்டபம்" பொருள்: "இடித்துரைக்கும் ஆற்றலில் இணையற்று நின்றவர், புல்லாங்குழல் இசையில் அசைவற்றிருக்கும் ஆநிரைகள்போல் பார்வையாளர்கள், மேடைப் பேச் சாளராகத் தனக்கென்ற ஒரு தனித்துவத்தை மக்கள் மனதில் பதிய வைத்த கம்பவாரிதி. இ.ஜெயராஜ் நடுவர் ஆகின்றார்.

வீடனனே- ந.விஜயசுந்தரம்- பரா.ரதீஸ், இலக்குவனே- ஆறு. திருமுருன்- அ.வாசுதேவா, கும்பகர்ணனே- ஸ்ரீ.பிரசாந்தன்- ச. லக்சன்.


உயிர்த்தெழுந்த ஏசு நாதரைப் பார்த்தவனைப் போல் வியந்து நின்றது சபை. ஓர் விழி கசிந்தபடி ஓர் ஓரமாய் அமர்ந்து இருந்தேன். தமிழ் பிசைந்தார்கள்- விசாலமாய் விசாரிக்க பொறுமையில்லை.

நிறைவு நாள் 16 ஆம் திகதி காலை அமர்வில் சொல்லிக் கடந்து விட முடியாத பேரன்பின் புதையல்கள், இந்தப் பிறவிக்காக இயற்கை அளித்திருக்கும் வரம்.

திரு.க. திருமாலழகன் தம்பதியர்- திரு.கு.சிவஞானசுந்தரம் தம்பதியர். மங்கல விளக்கு ஏற்றி அன்பின் வெளிச்சம் மேலும் ஒளிர்விட்டது.

சங்கீதத்தில் "பக்தியை" இணைக்கின்றபோது அதற்குக் கிடைக்கும் மகத்தான சக்தியை திருமதி விலாணி கோபி சாங்கர் இசையில் கேட்டு மெய் சிலிர்த்திருந்தேன். சப்தஸ்வரங்களை ஆதாரமாகக் கொண்ட இசையை தன் வாழ்க்கையின் நோன்பாகத் தவமிருக்கும் ஒரு இசைக்குயில். ரசிகர்களைப் பரவசப்படுத்தி அவர்களது உள்ளங் களைப் பண்படுத்தி உயர்ந்த இசையை அளித்தார்.

தலைமை உரையில் திடீர் மாற்றம் எற்பட்டு திரு.கு.சிவஞானசுந்தரம் உரை ஆற்றுவார் என்றதும் என் நெஞ்சில் அவநம்பிக்கை மின்னல்கள் அடித்தன. பேச்சாளர் என்று கருதுகின்ற இலக்கணத்துக்கான எந்த அடையாளமும்



இவரிடம் இல்லை. விருந்தா ளியோடு கூட வருகிறவனுக்கும் விருப்பம் இல்லாமல் சாப்பாடு போடு கின்ற மாதிரி சரி பேசட்டும் என்றேன். பேசி முடித்ததும் என் கருத்து தவறு என்று உணர்ந்தேன்.

பணக்காரர்களை நான் பணத்துக்காக மதிப்பதில்லை. அப்படிப் பார்த்தால் திருப்பதி சாமியை விட திருப்பதி உண்டியலைத்தான் தினமும் கும்பிட வேண்டும். அதற்கும் மேலே அன்பு காட்டும் ஓர் ஆத்மா என்பதை அவரைச் சுற்றியிருக்கும் வாழ்க்கையை எட்டியிருந்து கண்டேன். எனக்குத் தெரிந்தது ஓர் இதயம். எனக்குத் தெரியாமல் எத்தனை இதயங்களோ!

தொடக்கவுரை ஆற்றிய வி. திருக்குமரன் உரையில் உழைப்பாளி என்பவன் மொழியை இலக்கியத்தை விவாகரத்து செய்துவிட்டவன் அல்லது விவாகமே செய்து கொள்ளாதவன் என்றும், இலக்கியவாதி என்பவன் கையில் அழுக்கு ஒட்டாமல் சமூகத்தைச் சலவை செய்பவன் என்றும். மோசமான மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களாகவும் ஆகிவிட்டன என்ற கருத்து தவறு என்று உணர்த்தினர்.

சிந்தனை அரங்கு- "பொருள்" " கம்பகடலில் கண்டெடுத்த முத்துக்கள்"

நடுவர்- கம்பவாரிதி- இ-ஜெயராஜ்- உலக மகாயுத்தத்தில் முதல் குண்டு விழுந்தவுடன் சுறுசுறுப்படைந்து விடும் ஒரு தலைநகரத்தைப் போல சபை சுறுசுறுப்படைந்தது.

நான்கு இலக்கியகாரர் ஒன்று சேர்ந்துவிட்டால் அங்கு ஒரு காவல் நிலையம் தேவை என்பது இன்றைய இலக்கிய மேடைகளில் காணப்படும் உண்மை. அப்படித் தங்களைத் தாங்களே ஒற்றுமைப் படுத்த முடியாத இலக்கியகாரர்களுள் தேச ஒற்றுமையைப் பற்றியும் உலக ஒற்றுமை பற்றியும் பேசுவது எந்த விதத்தில் நியாயம். இவர்களுள் இவர் (கம்பவாரிதி) வித்தியாசமானவர் என்பதை நிருபித்தார்.

அறம்-ஆறு.திருமுருகன், கற்பு- ம.கோசலை, பக்தி- ஸ்ரீ.பிரசாந்தன் , வீரம்-வ. மகேஸ்வரன், அறுவடைக்குப் பிறகு வயல்களில் அடிக்கட்டையாவது மிஞ்சி நிற்கும் ஆனால் அன்று வயலில் வேர்களைத் தவிர எதுவுமில்லை.

சொல்லாலே இதயத்தைப் பிழிந்து தரும் சூட்சும வித்தையோ விருந்து.

நிறைவு நாள் மாலை அமர்வில் யாருக்கும் எட்டாத கற்பனையும் அதைச் செயற்படுத்திக் காட்டும் ஆற்றலும் கைவரப்பெற்ற அந்த மாமேதை பி. பாலமுருகன் குழுவினர் மங்கல இசை வழங்கினர்.

நன்னம்பிக்கை முனை அடைந்த வாஸ் கொடகாமாவாய் முகத்தில் ஓர் ஆனந்தவெளிச்சம் அடிக்க டாக்டர் வெங்கடாசலம் சுதர்சன் தம்பதியர் மங்கல விளக்கு ஏற்றினர்.

(தொடரும்...)

# இராசிபலன்

23.03.2025
பங்குனி 09, ஞாயிற்றுக்கிழமை
நவமி பின்னிரவு 1.39 மணிவரை

பூராடம் பின்னிரவு 12.34 மணிவரை
சுபநேரம் 9.16-10.46 மணிவரை
இராகுகாலம் 4.46-6.16 மணிவரை

சந்திராஷ்டமம்
ரோகிணி, மிருகசீரிடம்

வளவன்




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், அடுத்தவர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.





பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், போசன சுகமுண்டு.




சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.





பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும், போசன சுகமுண்டு.




குடும்ப மகிழ்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எண்ணங்கள் எளிதில் கைகூடும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.





ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயறபடுவது நல்லது, காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




காரிய அலைச்சல் சற்று அதிகரிக்கும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.




பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், திடீர் பண வரவால் சந்தோசமடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு




பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

ஊனையும் உணர்வையும் உயிரையும் தாண்டி அப்பால் தொடரும் அன்பே காதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 485

23.03.2025





# உள்ளூராட்சி தேர்தல் திருவிழா

■ விதுரன்

நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறுமென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தவிர, வேட்பு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டு விட்டன. ஏலவே 2023 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டு வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக அப்போது அந்தத் தேர்தலை நடத்த முடியாமல் போயிற்று.

அப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதாக இருந்தால், நாடு அதல பாதாளத்தில் வீழ்ந்து போகும் என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடாக இருந்தது.

எனினும் நிதி வசதி இல்லை என்பதற்காகத் தேர்தலை ஒத்திவைப்பதென்பது சட்ட வரையறைக்கு உட்பட்டதல்ல என்பதால், தேர்தலை ஒத்தி வைப்பதற்கான வியூகம் அமைக்கப்பட்டது.

ஆம், தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஓர் உறுப்பினர் பதவி விலகுவாராக இருந்தால் தேர்தலை ஒத்திவைக்க முடியும் என்ற அடிப்படையில், அப்போது தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினராக இருந்த திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். அதனடிப்படையில் தேர்தல் ஒத்திவைக்கப்படுகிறது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்தி வைத்தமை சட்டத்திற்கு முரணானது என்ற கோதாவில் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்படலாயிற்று.

மேற்படி மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர் நீதிமன்றம் 2023 இல் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமல் ஒத்தி வைத்தமை சட்டத்திற்கு முரண் எனத் தீர்ப்பு வழங்கியது.

இதற்கும் மேலாக, தேர்தல்கள் ஆணைக் குழு உறுப்பினர் ஒருவர் (திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ்) பதவியை இராஜினாமாச் செய்தமை காரணமாக தேர்தலை நடத்த முடியாமல் போயிற்று எனக்கூறிய போது, பி.எஸ்.எம் சார்ள்ஸ் அவர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவில் இருந்து விலகியமை தொடர்பில் நீதிமன்றம் தனது அதிருப்தியை சுட்டிக்காட்டியது.

எது என்னவாக இருந்தாலும் உள்ளூராட்சி சபைத்தேர்தலை நடத்தாமல் விடுவதற்கு உதவி செய்ததற்காக சம்பந்தப்பட்டவருக்கு ஆளுநர் பதவி வழங்கப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவை ஒருபுறமிருக்க, தற்போது அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சிப்பீடமேறுகிறது.

முன்னதாக, நாம் ஆட்சிக்கு வந்தால், உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவோம் எனத் தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் பிரசாரத்தில் கூறியிருந்தது.

இதற்கும் மேலாக, ஜனாதிபதியாகப் பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்கவின் முதல் வேலை பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு கையெழுத்திட்டதாகும்.

அதேநேரம் பொதுத்தேர்தல் முடிந்த கையோடு உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற அறிவிப்பையும் அவர் விடுத்திருந்தார்.

ஜனாதிபதி அநுரவின் அறிவிப்பும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பும் சேர்ந்து உள்ளூராட்சி சபைத்தேர்தலை 2025 மே மாதம் 6 ஆம் திகதி நடத்துவதற்கு வழிவகுத்துள்ளது.

### தேர்தலுக்கான நிதி அவரிடம் இல்லை; இவரிடம் உண்டு.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு நிதி இல்லை என்று கூறப்பட்டது.

ஆனால் பொதுத் தேர்தலை நடத்தி முடித்த அநுரகுமார திஸாநாயக்க, இப்போது உள்ளூராட்சி சபைத்தேர்தலை நடத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

அதுமட்டுமல்ல, அடுத்து மாகாண சபைத் தேர்தலை நடத்துவற்கான ஏற்பாடுகளும் நடந்தாகின்றன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு உண்டு என்பதுடன் குறித்த தேர்தல்களை நிறைவாக நடத்துவதன் மூலம் தேசிய மக்கள் சக்தி தனக்கான இரண்டு நன்மைகளை அநுபவித்துக் கொள்ள முடியும்.

அதாவது, தனது கட்சிக்காகப் பாடுபட்ட கட்சித் தோழர்களுக்கு அவரவர் தகைமைக் கேற்ப உள்ளூராட்சி சபையிலும் மாகாண சபையிலும் பதவிகளைக் கிடைக்கச் செய்தல்.

தவிர, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் அடைந்த வெற்றியோடு ஏனைய தேர்தல்களையும் சூட்டோடு சூடாக நடத்துவதன் மூலம் அவற்றின் வெற்றியையும் தேசிய மக்கள் சக்தி தனதாக்க முடியும்.

இந்த அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி சபைக்கான தேர்தலை விரைவுபடுத்தியுள்ளதென எதிர்க்கட்சிகள் கூறினாலும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்துதல் என்ற சட்ட ஏற்பாடுகள் எதிர்க்கட்சிகளின் கூப்பாடுகளை அமுக்கியுள்ளதெனலாம்.

தேர்தல் பற்றிய ஒரு பொதுக்கண்ணோட்டத்தைப் பார்த்தோம். இனி யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல் எவ்வாறாக உள்ளதென்பதை நோக்குவோமாயின், யாழ்ப்பாண மாநகர சபையில் தமிழ் மக்கள் கூட்டணி (மான்), ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி (சங்கு), பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனாவின் சுயேட்சைக் குழு (ஊசி) ஆகியவற்றின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இஃது அந்தந்தத் தரப்புகளுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றதெனில், இங்கு இரண்டு விடயங்களே காரணமாக இருக்க முடியும். அதாவது படிவங்களைச் செவ்வைப் பார்க்காமல், அவரச அவசரமாகப் பூர்த்தி செய்யும் போது அவற்றில் ஏற்படக் கூடிய வழுக்கள் நிராகரிக்கப்பைத் தந்து விடலாம்.

இதற்கும் மேலாக, வேட்பு மனுத்தாக்கல் செய்ய வேண்டும். அதேநேரம் தேர்தலில் போட்டியிடாமலும் இருக்க வேண்டும் எனக் கருதுகின்ற போது வேண்டுமென்ற படிவங்களை ஒழுங்காகப் பூர்த்தி செய்யாமல் விடுவது.

இந்த இரண்டில் எதுவாக இருந்தாலும் பூரணமாகப் பூர்த்தி செய்யப்படாத வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும் என்ற அடிப்படையில் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியின் முடிவு அமையும்.

வேட்பு மனுக்களைச் சரியாகப் பூரணப்படுத்தாததற்குக் காரணம் என்ன? என்று ஆராயும் போது தான், கட்சிகளின் பலமற்ற தன்மை, வேட்பாளர்களுக்கான தட்டுப்பாடு, முன்கூட்டியே தீர்மானம் எடுக்காமல் சடுதியாக எடுக்கப்படுகின்ற முடிவுகள், வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றாமை போன்ற இன்னோரன்ன காரணங்களால் வேட்பு மனுக்கள் நிராகரிப்புக்குட்படுகின்றன.

எதுவாயினும் இம்முறை யாழ்ப்பாண மாநகர சபைக்கான தேர்தலில் சங்கும் மானும் நிராகரிக்கப்பட்டமையானது, உரிய காரணங்களைக் கடந்து விமர்சனங்களுக்கு ஆளாகும் என்பது நிறுதிட்டமான உண்மை.




யாழ்.மாநகரத்தில் தேர்தல் திருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு


மகேசன் மாதவன்

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். பொறியியலாளர் மகேசன் மாதவன் அவர்கள் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம்.

சீரா ரெலிகொம் திட்டத்தின் என்ஜினியராக இருந்து சேவை செய்த அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவிற்கு இம்முறை வேந்தர் இல்லாமல் போயிற்று.

**கங்காணி:-** வேந்தர் இல்லாமல் பட்டமளிப்பு விழாவை நடத்தலாமோ.

**விதானையார்:-** முன்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தராகப் பேராசிரியர் நடராஜா இருந்தவர்.

ஆனால் அன்றைய போர்க்காலசூழலில அவர் யாழ்ப்பாணத்திற்கு வருவதில்லை. அந்த நேரங்களில யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருக்கிறவர் தான் பட்டத்தை வழங்கி வைப்பார்.

அப்படியான வேளையில, **வேந்தரால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்...** இப் பட்டத்தை வழங்கி வைக்கிறேன். எனத் துணைவேந்தர் அறிவித்து பட்டங்களை வழங்குவார்.

ஆனால் இந்த முறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வேந்தர் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்குது.

**மூப்பர்:-** அப்படியானதொரு நிலைமைக்கு என்ன காரணம்.

**விதானையார்:-** எல்லாம் அரசியல் தான். முன்பும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில அரசியல் ஊடுருவல்கள் இருந்தன.


எனினும் அந்த அரசியல் ஊடுருவல் கல்வி சாராத கட்டமைப்போட நின்று போயிற்று.

ஆனால் இப்ப விரிவுரையாளர்களே அரசியல் சார்ந்து செயற்படத் தொடங்கியிருக்கினம்.

இதால தான் எல்லாம் சிக்குப்பட்டுக் கிடக்குது.

ஒரு தரப்பு விரிவுரையாளர்கள், வேந்தராக அவரை நியமிக்கக் கூடாது. இவரை நியமிக்க வேணும் எண்டு கடிதங்கள் எழுதத் தொடங்க, எதுவும் செய்ய முடியாத நிலையில் அரசாங்கம் வேந்தர் நியமனத்தை நிறுத்தி வைத்திருக்குது.

**வாத்தியார்:-** யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின்ர 39 ஆவது



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் அரசியல்மயம்

பட்டமளிப்பு விழாவில மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம் ஆகிய துறைகளில பட்டம் பெற்ற மாணவர்களில பெரும்பாலானவர்கள் சிங்கள மாணவர்கள் என்ற விடயம் இன்னமும் எங்களுக்குத் தெரியாமல் இருக்குது.

எனினும் இது தொடர்பில அரசியல் சார்ந்து செயற்படுகின்ற விரிவுரையாளர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை.

**பண்டிதர்:-** வாத்தியார் நாங்கள் தமிழ் மாணவர்கள் எண்டு எங்கட இனம் பற்றிக் கவலைப்படுகிறம்.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில இருக்கிற ஒரு குறிப்பிட்ட விரிவுரையாளர்கள், சிங்கள மாணவர்கள் இங்கு படித்தால் என்ன? இது இலங்கைப் பல்கலைக்கழகம் தானே தமிழ்-சிங்களம் என்று ஏன்? பிரித்துப் பார்க்க வேண்டும் எண்டு கேட்கினமாம்.

**விதானையார்:-** அப்படிக் கேட்டால் நல்லது, அப்படிக் கேட்கிற விரிவுரையாளர்கள் தனித்துத் தமிழ் மாணவர்களோடு படித்ததாலதான் விரிவுரையாளர்களாக வந்தவியள் என்பதை நினைத்துப் பார்க்க வேணும்.

**வாத்தியார்:-** எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ் மாணவர்களுக்காக நிறுவப்பட்டது.

ஆனால் இப்ப இங்க சிங்கள மாணவர்கள் தான் அதிகம் படிக்கினம்.

இப்படி சிங்கள மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையில மூன்று உறுப்பினர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கினம்.

**விதானையார்:-** அப்ப இன்னும் சில வருடங்கள் போனால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர துணைவேந்தராக ஒரு சிங்களவர் வரக் கூடிய வாய்ப்பு இருக்குது தானே!.

**மூப்பர்:-** அப்படியொரு நிலை வந்த பிறகு தான். எங்கட ஆட்கள் தலையில கை வைப்பினம்.

**விதானையார்:-** மூப்பர் அப்படி நினைக்காதீங்க. சிங்களத் துணைவேந்தர் நியமிக்கப்பட்டால், அவருக்குப் பின்னாலும் அணி வகுத்துப் போவதற்கு எங்களிட்ட விரிவுரையாளர்கள் இருக்கினம்.

**வாத்தியார்:-** அரசியலைப் பொறுத்தவரை அது எப்ப கவிழும் எப்ப மேல வரும் எண்டு சொல்ல முடியாது.

ஆகையால எங்கட விரிவுரையாளர்கள் அரசியல் பேசலாம். தமிழ் இனத்தை வழிப்படுத்தும் கருத்துக்களை முன்வைக்கலாம்.

ஆனால் அரசியல் கட்சிகளோடு - ஆளும் தரப்புகளோடு கூட்டுச் சேர்ந்தால், மானம் மரியாதையை இழந்து போற கட்டம் தான் ஏற்படும் கவனம்.

இவ்வாறு வாத்தியர் கூற, ஆலடி நிசப்தமாகியது நிசப்தத்தை சிறாப்பர் கனகசபை ஊடறுத்தார்.

**சிறாப்பர்:-** அது சரி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின்ர 39 ஆவது பட்டமளிப்பு விழாவின் முதலாவது அமர்வில் புதிய பேரவை உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை எண்டு கேள்விப்பட்டன் உண்மை தானோ.


**கங்காணி:-** இனி இது தான் நடக்கும். ஆனாலும் அப்படியானதொரு சூழ்நிலை ஏற்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

ஆகையால யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின்ர புதிய பேரவை உறுப்பினர்கள் மிகவும் விழிப்பாகவும் கருசனையோடும் செயலாற்ற வேண்டும். இல்லையெண்டால் எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

**வாத்தியார்:-** இன்றைக்கு ஆலடியில முழுநேரமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர கதைதான். இந்த நேரத்தில, 39 ஆவது பட்டமளிப்பு விழாவில பட்டம் பெற்ற அனைவருக்கும் ஆலடி சார்பில வாழ்த்துத் தெரிவிக்கின்றோம் எனக் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

0076 097 3126

என்ற இலக்கத்திற்கு SMS, Whats App செய்யுங்கள்




பட்டலந்த படுகொலைக்கு விசாரணை. முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு...?

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் எப்படியானதாக அமையும் வியாசரே?

**சுட்டிக்குழந்தைகளின் சேட்டைகள் பற்றிக் கூறுங்களேன்?**

சிவம்-வதிரி

குழந்தைகள் நடக்கக் கற்றுக் கொண்டவுடன் முதல் செய்யும் சேட்டை ரி.வி.ரிமோட்டை உடைப்பதாகத் தான் இருக்கும்.

**அடுத்தவர்களை ஏற்கும் மனநிலை தற்போது அற்றுவிட்டதே வியாசரே?**

ராஜ்-யாழ்ப்பாணம்

ஆம், அதுவென்றால் உண்மைதான். ஒரு விடயத்திற்கு தாங்கள் எதிர்பார்க்கும் பதில் கிடைக்கவில்லை எனின் அது பொய் என்று கூறும் மனநிலையிலேயே தற்போதைய சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பது தான் உண்மை.

**உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் எப்படியானதாக அமையும் வியாசரே?**

தவிந்து-பூந்தோட்டம்

வெற்றி தோல்வி என்பதற்கப்பால் பல கட்சிகள், சுயேட்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட விடயம் கவலை தருவதாய் அமைந்தது.

தேர்தல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களை வாசித்து, விளங்கிக் கொண்டு அது தொடர்பில் விண்ணப்பிக்க முடியாதவர்களிடம் மக்களாகிய நாம் ஆட்சியைக் கொடுத்தால், தமிழ் எங்களின் விண்ணப்பங்களை சரியாக நடைமுறைப்படுத்துவீர்களா? என்ற கேள்வி என்னுள் எழுந்திருந்தது.

ஆயினும் இறைவனின் திருவிளையாடல்களை எம்மால் புரிந்து கொள்ள முடியுமா என்ன?

**தற்போது கண்ட இடங்களில் குப்பை கொட்டுகிறார்களே. இவர்களைத் திருத்த முடியாதா?**

எமில்ரன்-மந்துவில்

குப்பை கொட்டும் இடம் குப்பைத் தொட்டியாக இருக்க வேண்டும் என்ற தேவை இல்லை.

அதற்கு முன் நான்கு பேர் அங்கு குப்பை கொட்டியிருந்தாலே போதுமானது.

இந்த மனநிலையில் வாழும் மனிதர் வாழும் பூமியில் எப்படி இறைவன் வாழ்வான்.

**சமீபத்தில் படித்து இரசித்த விடயம் ஏதும் உண்டா வியாசரே?**

தாரு-கிளிநொச்சி

எங்காவது செல்லுமிடத்தில் கதிரையைக் கண்டால் அப்பாடா என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டு அதில் அமர்ந்து கொண்டால் உங்களுக்கு வயதாகி விட்டது என்று அர்த்தம்.

இந்த நிகழ்வு நமக்கு அடிக்கடி நடந்ததுண்டு. பார்த்தவுடன் சிரிப்பை அடக்க முடியவில்லை.




**கனடாவில் நீதி அமைச்சராகவும், சட்டமா அதிபராகவும் தெரிவு செய்யப்பட்ட ஹரி ஆனந்தசங்கரியினால் தமிழினப் படுகொலைக்கு நீதியைப் பெற்றுத்தர முடியுமா வியாசரே?**

சுதன்-குப்பிளான்

அமெரிக்க ஜனாதிபதியாக ஓர் ஈழத் தமிழர் தெரிவு செய்யப்பட்டால் கூட அவரால் ஈழத்தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு நீதியைப் பெற்றுத் தர முடியாது. இந்த உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

உலக அரசியல் மிக வித்தியா சமானது சுதன். அடித்துக் கொள்வது போல அடித்துக் கொள்வார்கள். ஆனால் அன்றிரவு மதுவிருந்தில் ஒன்றாய் இருந்து குதூகலிப்பார்கள்.

எல்லாம் தமிழினம் முற்பிறப்பில் செய்த பாவம் என்று கடந்து செல்வதே முடிவானது.

**உள்ளகப் பொறிமுறை மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமா வியாசர் அவர்களே?**

ஜெயக்குமார்-முகமாலை

முதலில் உள்ளகப் பொறிமுறை என்பது எப்படிப்பட்டது என்ற விளக்கத்தைத் சம்பந்தப்பட்டவர்கள் தர வேண்டும்.

உள்ளகப் பொறிமுறைக்குழுவில் யார் யார் இருக்கிறார்கள்? அவர்களின் விசாரணை வியூகம் என்ன? அந்த விசாரணை முடிவுகள் பகிரங்கப்படுத்தப்படுமா? குற்றவாளிகளை கண்டறிந்தால் அவர்களுக்கான தண்டனை என்ன? என்ற விடயங்களில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்தல்கள் மிக முக்கியமானது. இது நடக்குமா?

**பட்டலந்த படுகொலைக்கு விசாரணை. முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு...?**

ஆர்திக்-வதிரி

பட்டலந்த படுகொலை விசாரணை விடயம் நிச்சயம் சிங்கள மக்களின் சிந்தனையைத் தூண்டும்.

சிங்கள இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கானவர்களைக் கைது செய்து வதைமுகாமில் வைத்து சித்திரவதை செய்து படுகொலை செய்த விடயம் இப்போது பேசுபொருளாகியிருக்கும் நிலையில், நிச்சயம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு நீதியைப் பெற்றுத்தரும் சிந்தனை பெரும்பான்மை சிங்கள மக்கள் மனங்களில் எழும் என்பதில் மாற்றுக் கருத்தேதும் இல்லை.

**துன்மார்க்கனால் வேதனைகள் பெருகுமா வியாசரே?**

குமார் - யாழ்ப்பாணம்

தீய எண்ணங்கள், கெட்ட சிந்தனைகள் எம் மனதில் மேலோங்கினால் அதுவே எம் வாழ்வில் நடக்கும்.

நாம் எப்போதும் எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்த்து நல்ல ஆரோக்கியமான விடயங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

சிறுபிள்ளை ஒன்று கண்ணாடிக் கிளாசை தவறுதலாக உடைத்து விட்டது. இதற்கு பிள்ளையை உறுக்கி, அதட்டி, அடித்து, வெருட்டினால் அந்தப் பிள்ளைக்கு கிளாசை எடுக்கக் கூடாது என்ற எண்ணமே தோன்றும்.

இது உடையக் கூடியது. கவனமாகக் கையாள வேண்டும். இப்போது பார் உடைந்து விட்டது. இந்தத் துண்டுகள் காலில் குற்றினால் காயம் ஏற்பட்டுவிடுமல்லவா? அவற்றை கவனமாக அப்புறப்படுத்த வேண்டும் என்று மென்மையாகச் சொல்லிப் பாருங்கள். பிள்ளையின் மனவிருத்தி அதிகமாவதை உணருவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொக்கிஷக் கவிதை

1952ஆம் ஆண்டு ஈழத்துக் கவிஞர்
முருகையனால் எழுதப்பட்ட
இக்கவிதை
**“ஒவ்வொரு புல்லும்
பூவும் பிள்ளையும்”**
என்ற கவிதை நூலில்
வெளிவந்தது

# கதிர்காம தெய்யோ!



அய்யா, கதிரை அழகுமலையிற்
குடியிருக்கும்
தெய்யோ, வணக்கம்
இச் சிங்களத் தீவகத்
தென்புறத்தோய்,
உய்வார்கள் உய்யும் வகையே
உயர்ந்து, மேல் உய்யும்படி
செய்வாய், இது கேள்:
ஓர் சிங்களம்
ஆட்சி மொழி, இனிமேல்.

என்ன, உனக்கு அம்மொழியா
தெரியாது? இவ்வீழமிசைப்
பென்னம் பெரிய பெரும்பான்மை
யோர் மொழி சிங்களமே!
தொன்மைத் தமிழன் துதித்துப்
பணிய அருள் வழங்கும்
சின்னக் குழந்தை தமிழ்த் தெய்வம்
என்று உனைச் செப்புவர் தான்.

தயவு செய்து இந்தத் தமிழை
மறந்து இனிச் சிங்களத்தை
அயன்ன இயன்ன என்று
ஆறாம் வகுப்பு வரை படித்தால்
உயர்வு கியர்வு கிடைக்கவும்
கூடும்: நான் உன்னுடைய
நயமே நினைத்து இந்த வார்த்தைகள்
சொன்னேன், நன்றாய்க் கவனி.

சிங்கள மூலமே வேண்டுதல்
செய்வர், அச் செம்மொழியை
உன் கண்டனைய தமிழிற்
பெயர்க்க ஒருவருமே
இங்கே கிடைக்கார்:
இனிமேல், தமிழ் மொழி ஈழத்திலே
தங்க விடார்கள் தமிழை மற,
கதிர்காம தெய்யோ!

சொன்னேன் அறிக: நீ சும்மா
தமிழோடு அழுவதை விட்டு
இந்நாள் தொடக்கம் இவர்கள்
மொழியே படித்திடுக:
முன்னால் இதோ, ஒரு நோட்டீசு
தந்தேன் முருக, இனிக்
கன்னா பின்னா என்று
கத்திப் பயனென்ன? கால நெறி!

ஏலாது என நீ உரைக்கத்
துணியாய்:
இனியும் உன்றன்
வாலேன் அசைப்பாய்?
வரும் பயன் என்ன, வரதப்பனே!
வேலேன் உனக்கு? விறலேன்?
இலங்கைத் திருப்பதியில்
காலூன்றி நிற்க கருத்துண்டேல்...
வேலைக் கடலில் எறி.

# ஒளியே வழி...



ஞான யொமிளியாக மிளிரும் ஒளி
ஞானிகளுக்கு வழித்துணை ஒளி
பேரன்பிற்கு இலக்கண வரி ஒளி
பெரியோர் வாழ்வில் வார்த்தையாக கலங்கிடும் ஒளி

தேவரின் வாக்குறுதியாக வந்த ஒளி
தேவைப்படுவோரின் தூய்மை பயர்க்கும் ஒளி
தூய ஆவியின் தூய்மையடையாளம் ஒளி
துயரப்படுவோருக்கு விடுதலையளிக்கும் ஒளி

மாட்டுத் தொழுவமதில் பிரகாசித்த ஒளி
மாதத்திலொரு முறை வராத ஒளி
வேதாகம புத்தகத்தில் துளிர்த்திடும் ஒளி
வேதாந்தகர்களுக்கு ஞான விளக்கு ஒளி


சத்தியத்தில் தளைத்திடும் ஒளி
சாத்தான்களை கதிகலங்க வைத்த ஒளி

பூமியிலே பல ஒளி
புதுமை செய்யும் வல்லமை ஒளி
மேகத்திலே கண்களை தெறிக்க வைத்த ஒளி
மேற்குத் திசையிலே வழிகாட்டிய வால்வெள்ளி ஒளி

எம்மையெல்லாம் வாழ வைக்கப் பிறந்த ஒளி
இயேசு யென்னும் மெய்ப் பொருள் ஒளி
வார்த்தை மனுவானார் யென்னும் ஒளி
வாழும் காலம் மட்டும் இப்பிரபஞ்சத்தில்
நிலைத்திடும் ஒளி

**கவியரசன் கே.ஜே.றெக்ஸ்,
அக்கராயன்.**

# வாழ வைக்குமா?



பொருளில்லாத வாழ்வு வாழ
வாழ்வு சிறக்குமா ? - என்றும்
அருளை நாடி நிற்கும் மனிதன்
புவியில் வாழ்வதா? - கனவில்
இனிமை காண எண்ணி ஏங்கும்
வாழ்வு இன்பங் காணுமா?

உழைப்பை நம்பி வாழும் வாழ்வு
மனிதன் ஏற்பதே - என்றும்
ஏச்சுப் பிழைத் து வாழ எண்ணும்
மனிதம் வெல்லுமா? - அன்பு
கண்டு வாழும் இன்பந்தன்னில்
நிறைவு காண்பதா? - மனிதன்
உரிமையாக வாழ எண்ணின்
வாழ்வு சிறக்குமா ?

காலம் போற்ற வாழ்ந்த வாழ்வு
நிலைத்து நிற்குமா? - என்றும்
நிலைத்த வாழ்வு நீண்டு செல்லும்
எண்ணம் வாழுமா? - அன்பு
காணும் வாழ்வு துன்பமின்றி
வாழ முடியுமா? - என்றும்
உழைப்பு மட்டும் வாழ்வளித்து
வாழ வைக்குமா?

**- வளவை வளவன் -**

## கவிதைக் கலசம்

# செய்த பாவம் தீர்ந்திடுமா?



நிலை குலைந்து போய் -
நிர்க்கதிகுள்ளான அப்பாவிகளை
நிர்வாணமாய் நிற்க வைத்து
சுட்டுக்கொன்று நிர்மூலமாக்கிய
நீசத்தனமானவர்கள் இன்று
நிதிதேடி எங்கும் அலைகின்ற
நிலைக்கு ஆளான நிர்வாண இலங்கை
இனிமேல் எப்படி புதிதாய்
நிர்மாணம் செய்யலாம் என்று
நினைக்கின்றார்கள் போலும்
“எட்டி பழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன?”
பட்டுப்போன மரத்திலே பால் வடியுமா என்ன
கங்கையில் சென்று தீர்த்தமாடினாலும்
காசி நாதனையும் எம் கந்தனையும்
கனதடவை கையெடுத்துக் கும்பிட்டாலும்
கழுவ முடியாதிந்தக் கர்மா
அழகிய இலங்கையா அல்லது
அழுகிப்போன மாம்பழமா இது - இனி
மிச்சம் மீதி இங்கு உண்டென்றால்
அஃதெல்லாம் இங்கு கருகிப் போனவர்களின்
எச்சங்களாலேயே உணரப்பெறும்!

**வாணியழகன், இமையாணன்,
உடுப்பிட்டி.**


## அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான
சங்கு நாதத்தில் நீங்களும்
எழுதலாம்....

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

**ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி,
தொலைபேசி இலக்கம் என்பவற்றை
குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.**

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்தொட்ட வீரமங்கை மண்தொட்ட மகிமை

**"விண்கலத்தில் இருந்து வெளியே வந்த சுனிதா வில்லியம்ஸ் சிரித்தபடி கையை அசைத்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்."**

சர்வதேச விண்வெளி நிலையத்தில் கடந்த 286 நாட்களாக தங்கியிருந்த சுனிதா வில்லியம்ஸ், பத்திரமாக பூமிக்குத் திரும்பினார். கடந்த 19ஆம் திகதி இந்திய நேரப்படி சுமார் 3.30 மணிக்கு அவர் பயணித்த ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் விண்கலம், புளோரிடா மாகாணத்திற்கு அருகில், கடலில் இறங்கி, மிதந்தது.

புட்ச் வில்மோர் மற்றும் சர்வதேச விண்வெளி நிலையத்தின் சக பணியாளர்களான அமெரிக்க விண்வெளி வீரர் நிக்ஹேக், ரஷ்ய விண்வெளி வீரர் அலெக்சாண்டர் கோர் புனோவ் ஆகியோருடன் கடந்த 18 ஆம் திகதி இந்திய நேரப்படி காலை 10.35 மணிக்கு, சர்வதேச விண்வெளிநிலையத்தில் இருந்து புறப்பட்ட சுனிதா வில்லியம்ஸ், 17 மணி நேர பயணத்திற்குப் பிறகு பூமியை அடைந்தார்.

இந்த ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலம் வளிமண்டல மறு நுழைவு என அழைக்கப்படும் ஆபத்தான கட்டத்தைக் கடந்து பூமியை நோக்கிப் பயணித்தது. பிறகு பல்வேறு கட்டங்களாக பரசூட்கள் விரிக்கப்பட்டு, அதன் வேகம் குறைக்கப்பட்டு, நீரில் இறங்கியது.




**தொடர்பு துண்டிக்கப்பட்ட சில நிமிடங்கள்**

டிராகன் விண்கலம் பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழைந்த போது சற்று நேரத்துக்கு கட்டுப்பாட்டு அறையுடனான தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இது வழக்கமான நடைமுறையாகும். அப்போது விண்கலத்தைச் சுற்றி 1927 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை இருந்தது. டிராகன் விண்கலத்தின் வெப்பத்தடுப்பு ஓடு கள் உள்ளே இருந்த விண்வெளி வீரர்களைப் பாதுகாத்தன.

சிறிது நேரத்துக்குப் பிறகு தகவல் தொடர்பு மீட்கப்பட்டு விண்கலத்தை கடலில் இறங்குவதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. தன்னிச்சையாக விண்கலம் பூமியை நோக்கி விரைந்தது.

அப்போது விண்கலம் சுமார் 27 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் வந்து கொண்டிருந்தது. விண்கலத்தின் வேகத்தைக் குறைக்கும் பரசூட்கள் விரிந்தன. படிப்படியாக வேகம் குறைக்கப்பட்டு கடலில் விழுந்த விண்கலத்தை, நாசாவின் மீட்புப் படகுகள் பத்திரமாக மீட்டன.

**விண்வெளியில் "சிக்கியவர்கள்" என்பது உண்மையா?**

சுனிதா வில்லியம்ஸும், புட்ச் வில்மோரும் திட்டமிடப்பட்ட 8 நாட்களை விட அதிக நாட்கள், அதாவது சுமார் 286 நாட்கள் விண்வெளியில் தங்க நேரிட்டது. இருவரும் விண்வெளியில் சிக்கித் தவிப்பதாக விவரிக்கப்பட்ட போதிலும் அது ஒருபோதும் உண்மையில்லை.

ஏனெனில், கப்பல்களில் உள்ள உயிர்காக்கும் படகுகள் போலவே, சர்வதேச விண்வெளி நிலையத்திலும் ஒரு விண்கலம் அவசரகாலப் பயன்பாட்டிற்காக எப்போதும் இணைந்தே இருக்கும்.

போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட கோளாறால் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட்ட நாசா, சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட விண்வெளி வீரர்களின் பாதுகாப்புக் கருதி, அதே விண்கலத்தில் பூமிக்குத் திரும்புவதை தவிர்த்துவிட்டது. அதற்குப் பதிலாக, அவர்கள் இருவரும் சர்வதேச விண்வெளி நிலையத்திலேயே தொடர்ந்து தங்கியிருக்கவும், ஏற்கனவே திட்டமிட்டபடி, பூமியில் இருந்து செல்லும் அடுத்த விண்கலத்தில் இருவரும் பூமிக்கு அழைத்து வரவும் நாசா தீர்மானித்தது.

நாசாவின் இந்த முடிவே, சுனிதா வில்லியம்ஸ் பூமிக்குத் திரும்புவதை மாதக்கணக்கில் தள்ளிப்போட்டது.

**அடுத்தக் கட்டம் என்ன?**

9 மாதங்களுக்குப் பிறகு சுனிதா வில்லியம்ஸும், புட்ச் வில்மோரும் பூமிக்குத் திரும்பியுள்ளனர். அவர்கள் டெக்சாஸ் மாகாணம் ஹூஸ்டனில் உள்ள ஜான்சன் விண்வெளி மையத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்,அங்கு அவர்கள் மருத்துவ நிபுணர்களால் பரிசோதிக்கப்படுவார்கள்.

நீண்ட கால விண்வெளிப் பயணங்கள் உடலை பாதிக்கின்றன, விண்வெளி வீரர்கள் எலும்பு அடர்த்தியை இழந்து தசை இழப்பை சந்திக்கின்றனர். இரத்த ஓட்டமும் பாதிக்கப்படுகிறது.

**கண் பார்வையும் பாதிக்கப்படலாம்.**

உடல் இயல்பு நிலைக்குத் திரும்ப நீண்ட காலம் ஆகலாம், எனவே சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆகிய இருவரின் உடலும் புவி ஈர்ப்பு விசையுடன் வாழ்வதற்கு மீண்டும் பழகுவதால் அவர்களுக்கு விரிவான உடற்பயிற்சி முறை வழங்கப்படும்.

**போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தால் ஏற்பட்ட கால தாமதம்**

61 வயதான வில்மோர், 59 வயதான சுனிதா இருவரும் போயிங் ஸ்டார்லைனர் விண்கலம் மூலமாக கடந்தாண்டு சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்றனர். அவர்கள் எட்டே நாட்களில் பூமிக்கு திரும்பி வரவேண்டியது.

இந்த ஸ்டார்லைனர் விண்கலம் மனிதர்களுடன் சென்ற போயிங்கின் முதல் விண்கலம் ஆகும். வழக்கமான பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்பு விண்கலம் எவ்வாறு செயற்படும் என்பதை கவனிப்பதற்கான சோதனை ஓட்டமாக இது இருந்தது.

ஆனால் ஸ்டார்லைனர் விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்தை நெருங்கிய போது பல பிரச்சினைகளை சந்தித்தது. விண்கலத்தை வழிநடத்தும் அதன் ஐந்து உந்துவிசை அமைப்புகள் செயலிழந்தன. அதிலிருந்த ஹீலியமும் தீர்ந்து போனது.

இதன் காரணமாக இவர்கள் இருவரும் பூமிக்கு திரும்புவது தாமதமானது.

அதன் பிறகு அமெரிக்கத் தொழிலதிபர் எலான் மஸ்கின் விண்வெளி நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ் இன் விண்கலத்தைக் கொண்டு அவர்களை பூமிக்குத் திரும்ப அழைத்து வருவது என 2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முடிவு செய்யப்பட்டது.

முதலில் அவர்களை இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் பூமிக்குக் கொண்டு வருவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. பிறகு மார்ச் மாதம் என முடிவு செய்யப்பட்டது.

**சுனிதா வில்லியம்ஸின் விண்வெளிப் பயணங்கள்**

2006ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் திகதி முதன்முறையாக டிஸ்கவரி விண்கலத்தின் மூலம் விண்வெளிக்கு பயணப்பட்டார். Expedition 14 குழுவுடன் பணிகளைத் தொடர்ந்த அவர் Expedition 15 விண்கலத்தில் பணிகளை முடித்துக் கொண்டு 2007ஆம் ஆண்டு ஜூன் 22ஆம் திகதி பூமிக்கு திரும்பினார்.

2012ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் திகதி இரண்டாவது விண்வெளிப்பயணத்தை ரஷ்யாவின் சோயுஸ் டிஎம் ஏ-05 எம் விண்கலத்தின் மூலம் மேற்கொண்டார் சுனிதா வில்லியம்ஸ். இந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு அதே ஆண்டில் நவம்பர் 19ஆம் திகதி பூமிக்கு திரும்பினார்.

2015ஆம் ஆண்டில் வணிக ரீதியான விண்வெளிப் பயணங்களுக்கான முதல் விண்வெளி வீராக சுனிதா வில்லியம்ஸ் அறிவிக்கப்பட்டார். இந்த திட்டத்தின் தொடர்ச்சியாக 2024ஆம் ஆண்டு ஜூன் 5ஆம் திகதி போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு பயணம் செய்தார்.

ஸ்டார்லைனர் விண்கலத்தின் த்ரஸ்டர்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இக்குழு இன்றி விண்கலம் பூமிக்கு திரும்பியது. இதனால் வெறும் 8 நாட்கள் மட்டுமே திட்டமிடப்பட்டிருந்த இந்த பயணம், 9 மாதங்களைக் கடந்து நீண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: பார்த்தால் பசிதீரும்
பாடியவர்: T.M. சௌந்தரராஜன்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: மெல்லிசை மன்னர் M.S. விஸ்வநாதன்



பிள்ளைக்குத் தந்தை ஒருவன் நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன்
பிள்ளைக்குத் தந்தை ஒருவன் நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன் – நீ
ஒருவனை நம்பி வந்தாயோ? – இல்லை
இறைவனை நம்பி வந்தாயோ? – நீ
ஒருவனை நம்பி வந்தாயோ? – இல்லை
இறைவனை நம்பி வந்தாயோ?
பிள்ளைக்குத் தந்தை ஒருவன்– நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன்

தாயாரைத் தந்தை மறந்தாலும் – தந்தை
தானென்று சொல்லாத போதும்
தாயாரைத் தந்தை மறந்தாலும் – தந்தை
தானென்று சொல்லாத போதும்
தானென்று சொல்லாத போதும்
ஏனென்று கேட்காமல் வருவான் – நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன் இறைவன்

பிள்ளைக்குத் தந்தை ஒருவன் – நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன்

உள்ளோர்க்கு செல்வங்கள் சொந்தம் – அது
இல்லார்க்கு உள்ளங்கள் சொந்தம்
உள்ளோர்க்கு செல்வங்கள் சொந்தம் – அது
இல்லார்க்கு உள்ளங்கள் சொந்தம்
இல்லார்க்கு உள்ளங்கள் சொந்தம்
இல்லாத இடம் தேடி வருவான் – நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன் இறைவன்

பிள்ளைக்குத் தந்தை ஒருவன் – நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன் – நீ
ஒருவனை நம்பி வந்தாயோ? – இல்லை
இறைவனை நம்பி வந்தாயோ?
பிள்ளைக்குத் தந்தை ஒருவன் – நம்
எல்லோருக்கும் தந்தை இறைவன்

# விமர்சனங்களுக்கு பதிலடி கொடுத்த உத்வேக அணி!

சம்பியன்ஸ் டிராபித் தொடரை முடித்துவிட்டு இந்திய அணி நாடு திரும்பியிருக்கிறது. கடந்த எட்டு மாதங்களில் இந்திய அணி வெல்லும் இரண்டாவது ஐ.சி.சி கோப்பை இது. இதே ரோஹித்தின் தலைமையில் கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் இந்திய அணி ரி-20 உலகக் கோப்பைத் தொடரையும் வென்றது, குறிப்பிடத்தக்கது. சம்பியன்ஸ் டிராபிக்காக இந்திய அணி டுபாய் கிளம்பியபோதே நிறைய கேள்விகளும் முன்வைக்கப்பட்டன.

டுபாய் மைதானத்தில் தொடர்ச்சியாக கிரிக்கெட் போட்டிகள் நடந்துகொண்டே இருக்கிறது. அதனால் பிட்ச் ரொம்பவே மெதுவாக இருக்கின்றன. ஆக, வேகப்பந்து வீச்சாளர்களைவிட ஸ்பின்னர்களுக்கு இந்த பிட்ச் கூடுதலாக உதவும். முதல் போட்டியிலேயே ரோஹித் இந்தப் படிப்பினையைப் பெற்றுவிட்டார்.

அதனால், ஆரம்பத்திலிருந்தே சரியான ப்ளேயிங் லெவனைத் தேர்வு செய்தார். ஒட்டுமொத்தத் தொடரிலுமே ஒரே ஒரு முறைதான் ப்ளேயிங் லெவனை மாற்றினார். அந்த மாற்றமும் கோப்பையை வெல்ல முக்கிய காரணமாகவே மாறியது. கடைசி லீக் போட்டியில் தமிழக வீரரான வருண் சக்கரவர்த்தியை ப்ளேயிங் லெவனுக்குள் அழைத்து வந்தார். கிடைத்திருக்கும் வாய்ப்பின் அருமையை உணர்ந்து அந்தப் போட்டியிலேயே 5 விக்கெட் எடுத்தார் வருண்.

அதோடு நிற்காமல் அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டியிலும் மிக முக்கியமான விக்கெட்டுகளை வீழ்த்திக் கொடுத்தார். இந்தத் தொடரில் மட்டும் மொத்தமாக 9 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

வருண் சக்கரவர்த்தி மட்டுமல்ல அக்சர், குல்தீப், ஜடேஜா என ஆடிய அத்தனை ஸ்பின்னர்களும் மிக நேர்த்தியாக ஆடினர். குறிப்பாக, மிடில் ஓவர்களில் எதிரணியின் முன்னேற்ற வேகத்தை மட்டுப்படுத்தி மெதுவாக்கி அடுத்தடுத்து விக்கெட்டுகளை வீழ்த்தி சராசரியான ஸ்கோருக்குள் எதிரணியைச் சுருட்ட முழுமையாக உதவினர். வேகப்பந்து வீச்சாளர்களான ஷமி, ஹர்திக், ஹர்ஷித் ராணா ஆகியோர் இவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கினர். வங்கதேசத்துக்கு எதிரான முதல் போட்டியில் சுப்மன் கில் நின்று ஆடி போட்டியை முடித்துக் கொடுத்தார். பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியிலும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அரையிறுதியிலும் விராட் கோலி நின்று பெரிய இன்னிங்ஸை ஆடினார்.

கப்டன் ரோஹித் சர்மா இறுதிப் போட்டியில் இந்தியாவின் மீதான அழுத்தத்தைக் குறைக்கும் வகையிலும் தன்மீதான அழுத்தத்தைக் குறைக்கும் வகையிலும் ஆடி அசத்தினார். ஸ்ரேயாஸ் தொடர் முழுவதுமே சீரான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். கே.எல். ராகுல் எங்கே இறக்கினாலும் சிறப்பாக ஆடுகிறார். சம்பியன்ஸ் டிராபியில் நம்பர் 6 இல் இறங்கி ஹர்திக் பாண்ட்யாவோடு இணைந்து போட்டிகளை வெற்றிகரமாக முடித்துக் கொடுத்தார். இப்படி இந்த அணி சம்பியன்ஸ் கோப்பையை வென்றதில் அத்தனை வீரர்களின் பங்குமே இருக்கிறது.

இத்தகைய வரலாற்று வெற்றிக்கு, தொடருக்குள் இந்திய அணி செல்வதற்கு முன் அவர்கள் மீது வைக்கப்பட்ட கடுமையான விமர்சனங்களும் மிகமிக முக்கியக் காரணங்களே. பார்டர்-கவாஸ்கர் தொடர் தோல்வி. இலங்கைக்குச் சென்று அங்கே ஓ.டி.ஐ தொடரில் தோல்வி. நியூசிலாந்துக்கு எதிரான உள்ளூர்த் தொடரில் ஒயிட் வாஷ். என அடுத்தடுத்து தோல்விகளாகவே வந்து கொண்டிருந்தன.


உள்ளூர்ப் போட்டிகளில் ஆடமாட்டோம் என உறுதியாக இருந்த சீனியர் வீரர்களை, 'கட்டாயம் உள்ளூர்ப் போட்டிகளில் ஆடியே ஆக வேண்டும்' எனக் கூறி ஆட வைத்தனர். குடும்பத்தினரைப் போட்டிகளுக்கு அழைத்து வருவதில் கட்டுப்பாடுகள் விதித்தனர். தொடர் தோல்விகள் வீரர்களின் மீது நிறைய அழுத்தங்களை ஏற்படுத்தியது. குறிப்பாக, சீனியர்களான ரோஹித், விராட் கோலி ஆகியோரின் ஓய்வைப் பற்றியெல்லாம் பேசத் தொடங்கினர்.

இத்தனை அழுத்தங்களுக்கு மத்தியில் இந்திய அணி இந்தக் கோப்பையை வென்றுள்ளது. கட்டாயம் 2027 உலகக்கோப்பை வரை ஆடுவோம் என ரோஹித்தும் கோலியும் மறைமுகமாக உணர்த்தியிருக் கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் பெருமிதம்



முதல் இரவில், அவள் தன் கணவனின் பர்ஸை திறந்து பார்த்தாள். அதில் தன்னை விட அழகான ஒரு பெண்ணின் புகைப்படம் இருந்தது.

அவள் ஒரு கணம் திகைத்தாலும், அதைப் பார்த்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை.

அடுத்த நாள், சிலரின் குறைசொற்களிலிருந்து அவள் தெரிந்து கொண்டாள், கணவனின் பலமான முன்னைய காதல் வாழ்க்கையைப் பற்றி.

குடும்பத்தினரின் கட்டாயத்திற்கு மறந்து, அந்தப் பெண்ணை விட்டுவிட்டு, தன்னைத் திருமணம் செய்து கொண்டதாக...

அவளுக்கு வருத்தமாக இருந்தாலும், அதை அவள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

அவள் நல்ல மனதுடன் அவனைக் காதலிக்கத் தொடங்கினாள். பல கஷ்ட நேரங்களிலும் அவள் கணவனுக்கு உறுதுணையாய் நின்றாள்.


அவனுடைய வெறுப்புகள் மெதுவாக மெது வாக மறைந்தன.

சில நாட்களுக்குப் பிறகு, அவள் முற்றத்தை சுத்தம் செய்யும் போது கிழிந்த ஒரு புகைப்படத்தின் துண்டுகள் கிடைத்தன. அவள் அதை ஒட்டி வைத்த போது, அவளால் நம்பமுடியவில்லை, அது கணவ னின் பர்ஸில் இருந்த புகைப்படம்.

அவள் ஓடிச் சென்று தூங்கிக் கொண்டிருந்த கணவனை எழுப்பாமல், அவனுடைய பர்ஸை திறந்து பார்த்தாள். அதில் அந்த அழகான பெண் ணின் புகைப்படத்திற்கு பதிலாக, தன் கறுப்பான முகம் இருந்தது. அவள் அந்த பர்ஸை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

"காதலை வலுக்கட்டாயமாகப் பெற முடியாது. அது மனதில் உணர்ந்து கொள்ள வேண்டிய ஒன்று. அதற்கு அழகை விட நல்லது குணமே."

பொறுமையாக காத்திருப்பதும், தெளிவாக நடந்து கொள்வதும்தான் உண்மையான அன்பின் அடையாளம்.



# ஆச்சி அறிவுரை



## பரீட்சைக் காலங்களில் ஒலிபெருக்கி ஒலிப்பது சரியா?

**பேராண்டி...**

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடை கல்லா தவர்" திருவள்ளுவர் கல்வியின் முக்கியத்துவத்தை கண்ணுடன் ஒப்பிட்டிருக்கிறார்.

அதாவது கற்றவர்கள் கண்ணுடையவர்கள் என்றும் கல்லாதவர்களுக்கு கண்கள் இரண்டும் கண்கள் அல்ல, அவை புண்களே என்றும் பொருள் தந்திருக்கிக்கிறார்.

கல்வி எவ்வளவுக்கு முக்கியம் எண்டுறதுக்காகத்தான் இந்தத் திருக்குறளை நான் உனக்கு சொல்லுறன்.

கல்வி மட்டும்தான் ஒருவனை நல்ல மனிதனாக வாழ வைக்கும் பேராண்டி.

மனிசர் நாங்கள் பணம், சொத்து எண்டு எவ்வளவும் சேர்த்து வைச்சிருக்கலாம். ஆனால் அதுகள் நிலையில்லாதது. இன்டைக்கு எங்க ளிட்ட இருக்கும். நாளைக்கு இன்னொருத்தரிட்டைப் போயிடும். ஆனால் கல்வி அறிவு எண்டுறது அப்பிடியில்லை.

அது எங்கட கடைசிக் காலம் வரைக்கும் எங்களோடயே இருக்கும். அதை எவராலும் எடுக்கவும் முடியாது.

ஓம், பேராண்டி! இப்பிடிப்பட்ட கல்வியின்ர முக்கியத்துவம் தெரியாமல் எங்கட சமூகம் நடந்து கொள்ளுறத நினைக்க நெஞ்சு பதை பதைக்குது.

இது பரீட்சைக்காலம். கல்விப் பொதுச் சாதாரண தராதரப் பரீட்சைகள் கடந்த 17ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகிட்டது.

இந்தச் சோதினை பிள்ளைகளுக்கு வலு முக்கியமான சோதினை.

பிள்ளைகளை தங்கள் பாட்டில படிக்க விடவேணும். அப்பிடிப் படிச் சால் அது பிள்ளைகளுக்கு ஆழ் மனதில பதிஞ்சிடும்.

அதுகள் அமைதியாக இருந்து படிக்கிற சூழலை நாங்கள்தான் உருவாக்கிக் கொடுக்கவேணும்.

பரீட்சைக்காலங்களில எங்கட சனங்கள் வலு அவதானமாக நடக்க வெல்லோவேணும்.

ஆனால் அப்பிடி இல்லாமல் வீட்டு விஷேசங்கள் எண்டும் கோவில் திருவிழாக்கள் எண்டும் இரவிராகவும் அதிகாலை வேளையிலையும் சத்தமா ஒலிபெருக்கிகள் போடுறத ஒருநாளும் ஏற்றுக்கொள்ள முடியாது. கேட்டால், தாங்கள் ஒலிபெருக்கி பொமிசன் எடுத்தனாங்கள் எண்டு சொல்லு கினம். அதெல்லாம் சரிதான், ஆனால் பிள்ளைகள் படிகிறத்துக்கு சந்தர்ப்பம் கொடுக்காமல் இப்பிடி ஒலிபெருக்கியைப் போட்டுட்டு நியாயம் கதைக்கிறத நினைக்க கவலைதான் வருது.

ஒலிபெருக்கிக்கு அனுமதி வழங்கிறவரின்ர பிள்ளை படிக்கிற பிள்ளையா இருந்து, அதே இடத்திலைதான் ஒலிபெருக்கியைப் போடப் போகினம் எண்டு அனுமதி கேட்டால், அந்த அதிகாரி அதை அனுமதிச்சு கையொப்பம் இடுவாரோ?


என்ன செய்யிறது கெட்டொழிஞ்சு போறது மாற்றான் இனத்துப் பிள்ளைகள்தானே எண்டுற நிலைப்பாட்டில இருந்தால் வேறு எதைச் செய்ய முடியும்.

கோவில்கள், சமூக அக்கறையோட நடந்து கொள்ளவேணும். இப்பிடிச் சமூகத்தை சீரழிக்கிற மாதிரி நடந்தால், கோவில்களை எப்படி சமூக மாற்றத் துக்கான ஸ்தலங்கள் எண்டு சொல்லமுடியும்?

இது விடயத்தில ஊர்ப் பெரியவர்கள், சன சமூக நிலையங்கள், பெண் கள் அமைப்புக்கள், இளைஞர் அணியினர், சிறுவர் குழுக்கள் எண்டு பல தரப்பினரும் ஒண்டு சேரவேணும்.

பரீட்சைக் காலங்களில ஒலிபெருக்கி போடுறதுகளை முழுமையா நிறுத்த வேணும். இல்லாட்டி எங்கட சமூகம் அழிஞ்சு போறத்துக்கு நாங்களே காரணம் ஆகிடுவம்.

**ஆச்சி வருவா...**



மாவை.நா.கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிராணிகள் அன்புக்கு வேண்டும் எல்லைக்கோடு

செல்லப்பிராணிகளுக்கான உணவு, உபகரணங்கள், மருந்துகள் ஆகியவற்றுக்கென தனித் தொழிற்றுறையே இயங்கும் அளவுக்கு பிராணிகள் வளர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. பிராணிகள் மீதான அதீத அன்பில் பலரும் அவற்றுடன் மிக நெருக்கமாகப் பழகுகிறார்கள். ஆனால், வரம்பற்ற இந்த நெருக்கம் ஆரோக்கியம் சார்ந்து மனிதர்களுக்குப் பல பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்

நாய்களை மனிதர்கள் வேட்டைக்கும், பாதுகாப்புக்கும்தான் முதலில் பயன்படுத்தினார்கள். பின்னாளில்தான் அது செல்லப்பிராணியாக மாறியது. செல்லப்பிராணிகளின் வளர்ப்பு உளவியல் ரீதியாகப் பெரும் ஆறுதலைத் தருவது உண்மைதான்.

அதற்காக, உயிரியல் ரீதியில் அது வேறு உயிரினம் என்கிற உண்மையை நாம் மறுக்க முடியாதல்லவா? கிருமித்தொற்று நாகரிகமடைந்த மனிதனிடமிருந்தே மற்ற மனிதர்களுக்குப் பரவும் என்கிறதோடு, விலங்கினத்திலிருந்து மிக எளிதாகப் பரவும் என்பதால், அவற்றுடன் பழகுவதற்கு ஒரு வரம்பை வகுத்துக் கொள்வது அவசியம்.

நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளை வளர்க்கிறவர்களுக்கு அவற்றுக்குத் தடுப்பூசி போட வேண்டும் என்கிற விழிப்புணர்வு பரவலாக இருக்கிறது. அந்த வகையில் ஒருபுறம் மகிழ்ச்சி என்றாலும், தடுப்பூசி போட்டுவிட்டால் 100% பாதுகாப்புக் கிடைக்கும் என எண்ணி அவற்றுடன் மிக நெருக்கமாக இருப்பது தவறானது.

செல்லப்பிராணிகளுடனான நெருக்கம் உணர்வு ரீதியாக மட்டும்தான் இருக்க வேண்டும், நேரடித் தொடர்பு தவிர்க்கப்பட வேண்டும். செல்லமாக வளர்த்த பூனை நகத்தால் கீறியதால் இறந்தவர்கள் பலர் உண்டு, நாய் கடித்து இறந்தவர்களும் உண்டு. ஆகவே, மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பூனை கீறினாலோ, நாய் கடித்தாலோ வளர்ப்பவர்கள் ஊசி போட்டே ஆக வேண்டும். வளர்ப்புப் பிராணிகள் கீறாமல், கடிக்காமல், தொற்றுப் பரவும்படியாக நக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.



பிராணிகளைப் பலரும் படுக்கையறை வரை அனுமதிக்கின்றனர். அது மிகவும் தவறு. இவற்றின் முடித்துகள்கள் மனிதர்களின் நுரையீரலுக்குள் சென்று ஒவ்வாமையை ஏற்படுத்தும். காற்றோட்டம் இல்லாத ஏ.சி அறையில் இந்தப் பாதிப்பு இன்னும் அதிகமாக இருக்கும். பிராணிகளிடம் ஏதேனும் ஒட்டுண்ணிகள் இருப்பின் அது வளர்ப்பவர்களையும் பாதிக்கும். வளர்ப்புப் பிராணிகளைக் கொஞ்சிய பின்னர், கைகழுவும் பழக்கம் கூட பலரிடம் இல்லை. இவையெல்லாம் தொற்றினை ஏற்படுத்தும் வாய்ப்புள்ளதை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்

எனவே, செல்லப்பிராணிகள் வளர்க்கிறவர்கள் அதற்குண்டான தற்காப்போடு வளர்க்க வேண்டும். என்னதான் செல்லமாக வளர்த்தாலும், அவை வேறோர் உயிரினம் என்கிற தெளிவும் எச்சரிக்கை உணர்வும் எல்லைகளும் கண்டிப்பாக வேண்டும்.



# அடுக்களைப் பக்கம்...

மிக்ஸி, கிரைண்டர் போன்றவற்றில் ஜாரை வெளியே எடுக்கும்போது, சுவரிலுள்ள ஸ்விட்சை அணைத்து விட்டு எடுக்கவும். சமையலறை மின்சாதனங்களைக் கையாளும் போது, கைகள் ஈரமாக இருக்கக்கூடாது. அருகில் ஒரு டவல் வைத்துக்கொண்டு அவ்வப்போது துடைத்துக்கொள்ளலாம். மின் சாதனங்களை இயக்கும் போது காலணிகள் அணிந்து கொள்வது நல்லது.

முடிந்தவரை அடிக்கடி உபயோகிக்கும் மின்சாதனங்களுக்குத் தனித்தனி பிளக் பாயின்ட் இருந்தால், ஒன்றைப் பிடுங்கி இன்னொன்றைச் செருகும் அவஸ்தை இருக்காது. ரிஸ்க்கும் குறையும். மின்சார உபகரணத்தைத் தயார் செய்வதற்கு முன்னால் அதிலுள்ள ஸ்விட்சும், சுவர் ஸ்விட்சும் நிறுத்திய நிலையில் இருக்கிறதா என்பதைக் கவனிக்கவும். மின்சாதனங் களை ஒன்றோடொன்று இடித்தபடி வைக்காமல், அவற்றுக்கு இடையே போதிய இடைவெளி விட்டு வைக்க வேண்டும்.

அதிக மின்சாரம் இழுக்கும் உபகரணங்களை ஒரே நேரத்தில் இயக்காமல், ஒன்றுக்குப் பிறகு மற்றொன்றை இயக்கவும். உதாரணமாக, மைக்ரோவேவ் அவன், மிக்ஸி இரண்டையும் ஒரே நேரத்தில் ஒன் செய்ய வேண்டாம்.

# வெற்றியும் தோல்வியும் வீரருக்கு அழகு



சிலர் இளம் வயதிலிருந்தே எல்லாவற்றையும் திறமையாகக் கையாண்டு, நேர்த்தியுடன் எல்லா வேலைகளிலும் வெற்றி பெறுவார்கள். தொட்டதிலெல்லாம் வெற்றி கிடைப்பதால் தங்களைத் தாங்களே சூப்பர் ஹீரோ என்றும் நினைத்துக் கொள்வார்கள்.

ஆனால், எல்லா நாட்களும் ஒரே மாதிரி இருக்காதே. இவர்களுக்கும் ஒரு நாள் தோல்வி வரும். ஆனைக்கும் அடி சறுக்கும். அப்படித் தோல்வி வரும்போது அவர்களின் மொத்த சூப்பர் ஹீரோ மனப்பான்மையும் நொருங்கிவிடும்.

அத்தனை காலமாக தாங்கள் வெற்றியாளராக இருந்ததையே ஒரு தோல்வியினால் மறந்து, நிலை குலைந்து போவார்கள். **"வெற்றியும் தோல்வியும் வீரருக்கு அழகு"** என்ற பழமொழியை நினைவில் கொண்டால் தோல்வி பாதிக்காது.



# சமைப்போம் சுவைப்போம்

## பாசிப் பருப்புப் பகோடா

### தேவையானவை:

1. பாசிப்பருப்பு – ஒரு கப்
2. சின்ன வெங்காயம் – 150 கிராம்
3. நறுக்கிய இஞ்சி, பூண்டு – தலா ஒ
4. பச்சை மிளகாய் – 3 (நறுக்கவும்)
5. கறிவேப்பிலை, கொத்தமல்லித்தழை – சிற
6. பெருஞ்சீரகம் – கால் டீஸ்பூன்
7. காய்ந்த மிளகாய் – ஒன்று
8. உப்பு, எண்ணெய் – தேவையான அளவு

### செய்முறை :

பாசிப்பருப்பை ஒரு மணி நேரம் ஊற வைத்து தண்ணீரை வடித்து வைக்கவும். பிறகு பாசிப்பருப்பு, உப்பு, காய்ந்த மிளகாய் சேர்த்து கொரகொரப்பாக அரைத்துக்கொள்ளவும். பின்னர் ஒரு பாத்திரத்தில் சேர்த்து நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு, கறிவேப்பிலை, கொத்தமல்லித்தழை, பெருஞ்சீரகம் சேர்த்து நன்றாகப் பிசிறிக்கொள்ளவும். மாவை சூடான எண்ணெயில் சிறிது சிறிதாகக் கிள்ளிப்போட்டுப் பொன்னிறமாகப் பொரித்தெடுக்கவும்.

**குறிப்பு :**

**பாசிப்பருப்பை அரைக்கும்போது முற்றிலுமாக தண்ணீரை வடித்த பின் அரைக்கவும். தண்ணீர் பதத்துடன் இருந்தால் எண்ணெய் அதிகமாக இழுக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் வாழ தகுதியற்ற இடமாகிறது பூமி...!



காலங்காலமாக மனிதனும் பிற உயிர்களும் மண்ணும் வெளியிட்டு வரும் கரியமில வாயுவை (கார்பன் டை ஆக்ஸைடு) காடுகளில் உள்ள மரங்கள் மூலமாகவும், கடலில் வாழும் சில உயிரிகள் வாயிலாகவும் உள்ளிழுத்து காற்று மண்டலத்தைச் சுத்தம் செய்து வருகிறது இயற்கை. வெளியிடப்படும் மற்றும் உட்கவரப்படும் கார்பனுக்கு இடையிலான சமநிலைதான், உயிர்கள் இங்கே உயிர்த்திருக்கக் காரணம். ஆனால் பல்வேறு காரணங்களால், கார்பனை உறிஞ்சும் திறன் காடுகளிடமும் கடல்களிடமும் தற்போது குறைந்து வருவதாக அதிர்ச்சியூட்டியுள்ளது.

இதற்கும் 2023ஆம் ஆண்டு உலக வரலாற்றிலேயே அதிகமான சராசரி வெப்பநிலை பதிவான ஆண்டாக அமைந்ததற்குமான நெருங்கிய தொடர்புதான், இப்போது விஞ்ஞானிகளை அச்சுறுத்துகிறது.

தற்போது வளிமண்டலத்தில் உள்ள கரியமிலத்தின் அளவு, தொழிற்புரட்சி ஏற்படுவதற்கு முந்தைய காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் ஏறக்குறைய 50% அதிகரித்திருக்கிறது. 1958ஆம் ஆண்டு காற்றில் இருந்த கார்பனின் அளவு 300 பி.பி.எம் (PPM - Parts Per Million) மட்டுமே. தற்போதோ அது 420 பி.பி.எம். தொடர்ந்து அது அதிகரித்து வரும் விகிதம்தான் அச்சமூட்டுகிறது. ஏனெனில் காற்றில் கரியமிலத்தின் விழுக்காடு கூடுவது, பூமியில் உயிர்கள் வாழ்வதற்கான சூழல் முடிவுறுவதற்குச் சமம்.

அதிகாலையில் அடிவானில் காணக் கிடைக்கும் வெள்ளி (வீனஸ்) கோளினைப் பார்த்திருப்போம். வெள்ளியின் வளிமண்டலத்தில் கிட்டத்தட்ட 96.5% கரியமில வாயுவே நிரம்பியிருக்கிறது. 465° செல்சியஸ்°டன் அதனை மனிதன் வாழவே தகுதியற்றதாக மாற்றுவதும் இதுதான். நமது பூமியும் தற்சமயம் மெல்ல மெல்ல அப்படியான கார்பன் சூழ் பாலைவனமாகத்தான் மாறிக்கொண்டிருக்கிறது.

உலகின் மகிழ்ச்சியான நாடாகக் கருதப்படும் பின்லாந்து, கார்பனின் வெளியீட்டைக் குறைக்க முடிவெடுத்தது. 2035இற்குள் "ஹகார்பன் நியூட்ரல்" நிலையை எட்ட இலக்கு வைத்து முன்னேறியது. அதாவது, காடுகள், கடல்களால் உட்கவரப்படும் அளவு கார்பனை மட்டுமே வெளியிடுவது, அதன் மூலமாக வளி மண்டலத்தைத் தூய்மைப்படுத்துவது. வாகனங்களை இயக்குவதில் தொடங்கி தொழிற்சாலைகளின் செயற்பாட்டை முறைமைப்படுத்துவது வரை எல்லாவகையிலும் அதற்காக அதிகமாகவே பிரயத்தனப்பட்டது. விளைவாக, 43% கார்பன் வெளியீட்டைக் குறைத்தும் காட்டியது. ஆனாலும்கூட, இன்னமும் 1990களில் எந்த அளவு கார்பன் இருந்ததோ அதே அளவுதான் அங்கு இப்போதும் நீடிக்கிறது.

ஆழிப்பெருங்கடல் - ஆயிரமாயிரம் ரகசியங்களை மறைத்து வைத்திருக்கும் மூடியைத் தொலைத்த ஒரு மர்மப் பாத்திரம். தண்ணீரை மேகத்திற்குத் தாரைவார்ப்பதை நிகழ்த்தும் நீர்ச் சுழற்சி தொடங்கி நைட்ரஜன் சுழற்சி, கார்பன் சுழற்சி ஆகிய மூன்றுக்கும் காரணமாக இருக்கும், 24*7 இயங்கும் இயற்கையின் சீரிய தொழிற்சாலை. காடுகள் மட்டுமல்ல, கடல்களும் கார்பனை உட்கவரும் தன்மை கொண்டவை. அதுவும் தற்போது குறைந்திருப்பதற்கும், காரணம் நாமேதான்.

தற்போது பிரச்னை என்னவென்றால், நமது இயற்கைக்கு எதிரான நடவடிக்கைகளின் விளைவாக உலகின் வெப்பநிலை கூடுவதால், உலகின் பனிக்கட்டிகள் உருகுகின்றன. விளைவு, கடலுக்கடியிலான நீரோட்டங்கள் அதிகரித்து, அதனால் கடல் உயிரிகள் பாதிப்படைகின்றன. பனிக்கட்டிகள் உருகுவது அவற்றை அதிகமான சூரிய ஒளிக்குக் காட்சிப்படுத்தும் என்பதால் இந்த உயிரிகள் தாமாகவே கடலின் ஆழங்களைத் தேடி நகர்கின்றன. கடல்களால் உட்கவரப்படும் கார்பனின் அளவும் இதனால் பாதிக்கப்படுகிறது. மொத்தத்தில், இயற்கையின் சமநிலையைக் குலைக்கும் நமது தவறுகளுக்கான தண்டனையாக கார்பனை உட்கவரும் தன்மை காடுகளுக்கும், கடல்களுக்கும் குறைந்து போகின்றன.

மரக்கன்றுகளை நடுவது, காடுகளை உருவாக்குவதுதான் கண்முன் இருக்கும் தீர்வு. உலகில் அமெரிக்காவின் நிலப்பரப்புக்குச் சமமான அளவில் மரங்களை நட்டால் மட்டுமே "கார்பன் நியூட்ரல்" என்ற நிலையை உலகால் எட்டமுடியும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

ஐரோப்பிய நாடுகள் பலவும் ஏற்கெனவே இதனை நடைமுறைப்படுத்திவிட்டன. மரத்தை வெட்டுவதற்கான அனுமதி ஒப்பந்தத்தை வழங்கும் போதே கட்டுமான நிறுவனங்களுக்கும், எரிபொருளுக்காக அதனை வெட்டுபவர்களுக்குமான முதல் நிபந்தனை, "வெட்டப்படும் ஒரு மரத்திற்கு சமமாக இரு மரங்களை நட்டுப் பராமரிக்க வேண்டும்" என்பதுதான்.

பிலிப்பைன்ஸ் அரசு, ஒவ்வொரு மாணவரும் பள்ளியிலிருந்து கல்லூரிக்குச் செல்லும் முன் குறைந்தது பத்து மரங்களையாவது நடவேண்டும் எனச் சட்டம் இயற்றியுள்ளது. சவுதி அரேபியா 10 மில்லியன் மரங்கள், அயர்லாந்து 22 மில்லியன் மரங்கள் என இலக்கு வைத்து நகர்கின்றன. வரும் முன்னும் காக்கவில்லை, வந்த பின்னரும் விழிக்கவில்லை.

## தெளிவே என் சிந்தனையுள்... 2

துன்பம் வரும் போது சிரிக்கச் சொன்னார் வள்ளுவர். எமக்குத் துன்பம் வரும் போது நாம் சிரிக்கலாம். ஆனால் மற்றவர்களின் துன்பம் கண்டு சிரிப்பது மிருகத்திற்கு ஒப்பான செயல். எனக்குத் தெரிந்தவர் ஒருத்தர், அதிகம் படித்தவர். எம் ஊரில் சொத்துப்பத்துடன் வாழ்ந்தவரும் அவரே. தந்தை – தாய்க்கு ஒரே மகன். அவர்களும் இறந்து போக, தனிமையில் வாழ்ந்து வந்தார். அதிகம் படித்தும் அதிகம் பணம் இருப்பதும் அவரின் உள்ளே இருந்த மனிதனை மறைத்துவிட ஆணவம் என்ற அரக்கன் அவரில் தென்படத் தொடங்கினான். அவர் எப்படிப்பட்டவர் என்பதற்கு ஒரு சிறு உதாரணம்: ஒருநாள் அவர் வீட்டிற்கு ஒரு வயோதிப மாது உதவி கேட்டு சென்றாள்.

"என் வீட்டுக்குள் பிச்சைக்காரியான நீ, என் அனுமதி இன்றி எப்படி வருவாய்" என கோபங்கொண்டு கதவைப் பூட்டி விட்டு வீட்டில் நின்ற கடிநாயை அவிழ்த்து விட்டார். பாவம் அந்த வயோதிப மாதுவின் அலறல் ஊர் எல்லை வரை கேட்டது. அவர் வீட்டின் அருகில் நின்று எவரும் கதைக்கக் கூடாது. ஊரின் நல்லது – கெட்டது எதற்கும் அவர் செல்வதில்லை. இவ்வாறு பணத் திமிர் கொண்டு செருக்குடன் வாழ்ந்து வந்தார். சொந்த பந்தம், உறவு, சுற்றம் சூழ எவரும் தன்னுடன் ஒட்டாத வாழ்வை ஒற்றை ஆளாய் வாழ்ந்தார்.

நாட்கள் கடந்தோடின ஊரவர்களும் அவர் தொடர்பில் கரிசனையற்று விட்டனர். அவர் அந்த வீட்டில் இருக்கின்றாரா? இல்லையா? என்பது கூடத் தெரியாத அளவில் நிலை வந்துவிட்டது. ஒருநாள் அவரின் வீட்டிலிருந்து துர்நாற்றம் வருவதை உணர்ந்த ஊரவர்கள் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர். பொலிஸார் வந்து வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்றனர். வீட்டின் விறாந்தையில் சோபாவில் இருந்தபடியே அவர் இறந்து கிடந்தார். நிலத்தில் தண்ணீர்ப் போத்தல் ஒன்றும் சிதறிக் கிடந்தது. அவர் இறந்து 10–15 நாட்கள் ஆகியிருக்கும் என அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டனர்.


அன்பானவர்களே! இறைவன் எம்மை ஏதோ ஒரு காரணத்திற்காகவே இந்தப் பூமியில் படைத்திருக்கிறான். நாம் எதற்காக இங்கு வந்தோமோ அதைச் சரியாய்ச் செய்துவிட வேண்டும். இருக்கும் சிறிது காலத்தை அடுத்தவரில் அன்பு செலுத்தி வாழ்ந்தால், அது எம்மை சொர்க்கத்தில் சேர்த்துவிடும்.

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்**
**அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"**



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ் கோட்டை

செங்கை ஆழியான்

49

ஐ. இந்திரராஜன் தவிர ஏனையோர் கோட்டைக்குள் காணமல் போயினர். இந்திரராஜன் மட்டும் சித்திரவதைக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருந்தார். அவரின் இடுப்பிற்குக் கீழ் பலகாயங்களும், முகத்தில் சூட்டுக்காயங்களும், விரல் நகங்கள் பிடுங்கப்பட்டும் காணப்பட்டன.

ஜூலை 17, 1979 ஆம் திகதி பிரிகேடியர் வீரதுங்க யாழ்ப்பாணம் வந்து கோட்டை ராணி மாளிகையில் அமர்ந்தார். அன்றிலிருந்து கோட்டைக்குள் நிரந்தரமான இராணுவப் படையணி ஒன்று குடியேறியது.

*10 ஜூலை, 1984.* யாழ்ப்பாணக் கோட்டை ஈழத் தமிழ்ப் போராளிகளினால் முற்றுகையிடப்பட்டது. இது யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றும் நோக்கிலான முற்றுகையன்று ஸ்ரீலங்கா இராணுவத்தை யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து வெளியேறாது தடுக்கும் முற்றுகையாகும். இந்த முற்றுகைக்கு ஈழத்தமிழ் விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணக் குடா நாட்டுத் தளபதி கிட்டு தலைமை தாங்கினார். யாழ்ப்பாணக் கோட்டை வரலாற்றில் மிக நீண்ட கால முற்றுகையாக இது இருந்தது. 03. ஓகஸ்ட், 1987 இந்திய அமைதி காக்கும் படை, யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பிரவேசிக்கும் வரை இந்த முற்றுகை தொடர்ந்திருந்தது. சரியாக மூன்றாண்டுகள் 23 நாட்கள் இந்த முற்றுகை நடந்தது.

யாழ்ப்பாணக் கோட்டை, கோட்டையை அடுத்துள்ள யாழ் பொலிஸ் விடுதிகள் என்பனவற்றில் ஸ்ரீ லங்கா இராணுவம் நிலை கொண்டிருந்தது. பின்னர் யாழ்ப்பாணம் தொலைத் தொடர்பு நிலையக்கட்டடத்திலும் சிறிய முகாம் ஒன்றினையும் அமைத்துக்கொண்டது. யாழ்ப்பாணக் கோட்டைக்கு அப்பால் மண்டை தீவிலும் குருநகரிலும் இராணுவ முகாம்கள் இருந்தன. இவற்றிலிருந்து இராணுவத்தினர் வெளியேறாது விடுதலைப் புலிகள் அரண் அமைத்து காவல் காத்தனர்.

யாழ்ப்பாணக் கோட்டையின் புறச்சுற்று வீதியில் விடுதலைப் புலிகளின் அரண்களோடு புளொட், ரெலோ, ஈபிஆர்எல்எப் இயக்கக் குழுக்களின் கண்காணிப்பு அரண்களும் ஆரம்பத்தில் இருந்தன. கொட்டடி, காங்கேசன்துறைவீதி, முனியப்பர் வீதி, நூல்நிலைய வீதி, அந்த வீதிகளுக்கு இடையிலான அரச கட்டடங்கள் என்பனவற்றில் எல்லாம் போராளிகள் நிலை கொண்டு யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து இராணுவத்தினர் வெளியேறாது கண்காணித்தனர். கோட்டைக்குள்ளிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வெளியே வரமுயலும் வேளைகளில் பயங்கரமாக அவர்களைத் தாக்கி, யாழ்ப்பாணக் கோட்டைக்குள் அவர்களை முடங்க வைத்தனர். அதனால், ஸ்ரீ லங்கா அரசு யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து 1000 மீற்றர் பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாகப் பிரகடணப்படுத்தியது.

(தொடரும்...)

# கடல் புறா

அந்தச் சுடுசொற்கள் கூட அவள் வாயிலிருந்து இன்பமாகத்தான் உதிர்ந்தன. மரத்தில் சாய்ந்த உடலைச் சிறிது வளைத்துக் கொண்டாள் அவள். அதனால் நடனப்பாணி போலவே நின்ற மஞ்சளழகியைத் திடமாக நெருங்கிய படைத் தலைவன், "மனைவியாகாவிட்டாலென்ன, மனைவியாக வேண்டியவள் தானே?" என்று கூறி அவள் இடையில் தனது ஒரு கையையும் வைத்தான்.

அவள் அசையவில்லை. அவன் கையையும் அப்புறப்படுத்தவில்லை. "மனைவியாகும்முன் ஒரு பெண்ணைத் தொடுவது முறையல்ல," என்றாள் அவள்.

அவன் மெல்ல நகைத்தான். "ஏற்கெனவே தொட்ட பெண்களைத் தொடுவதில் தவறில்லை. தவிர எங்கள் நாட்டில் காந்தர்வ மணம் என்பது ஒன்று உண்டு," என்று கூறி அவளுக்குப் பக்கத்தில் அவனும் ஒருக்களித்துச் சாய்ந்தான்.

"அந்த மணத்துக்கு இருவரும் சம்மதப்பட வேண்டும்" என்று கூறினாள் மஞ்சளழகி. தன் உடலின் இடப்பக்கத்தில் மெல்லச் சாய்ந்த அவன் உடலைக் கையால்கூட நகர்த்தாமல்,

ஏன் உனக்குச் சம்மதமில்லையா? இல்லை. ஏன்? உங்கள் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை, என்ன என் போக்கு? அதிகமாகக் குடிக்கிறீர்கள்.

"சரி கொஞ்சம் குறைத்துக் கொள்கிறேன்" கூடாது. அடியோடு மது அருந்தக் கூடாது.

**ஊதல், ஊதல், ஊதல்**
**ஊதினால் சாதல், சாதல், சாதல்**

சரி, விட்டுவிடுகிறேன். எப்பொழுது? ஒரு மாதம் கழித்து. ஒரு மாதம் எதற்கு?

"நல்ல பழக்கங்களைச் சீக்கிரம் விட்டுவிடலாம். கெட்ட பழக்கங்களை ஒழிக்கக் காலம் தேவை!"

"நாளை முதல் சிறிது சிறிதாகக் குறைக்கிறீர்களா?"

"குறைக்கிறேன், ஆனால் இதை ஊதிப் பார்," என்று கூறி கச்சையில் இருந்த சிறு கடற் சிப்பியொன்றை எடுத்து மஞ்சளழகியிடம் நீட்டினான் இளையபல்லவன்.


மஞ்சளழகி இளையபல்லவனை உற்றுநோக்கி, "இதை ஏன் ஊத வேண்டும்?" என்று கேட்டாள்.

"இந்தக் கடற்சிப்பி ஓர் ஊதுகுழல். இதிலிருக்கும் துவாரங்களைப் பார். இது எழுப்பும் ஒலி புது முறையில் இருக்கிறது. இப்படி வாயில் வைத்துப் பலமாக ஊத வேண்டும்," என்று கூறி அவள் வாயில் அந்தச் சிப்பியின் ஒரு பாகத்தை வைத்து அழுத்தவும் செய்தான்.

மஞ்சளழகி அதை வெடுக்கென்று அவன் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டாள். "எதற்காக இதை நான் ஊத வேண்டும்? சொல்லுங்கள்" என்றாள்.

"பல மர்மங்களை இது விளக்கும்." "இந்தச் சிப்பியா?" :இப்பொழுது குடித்திருக்கிறீர்களா?" "இல்லை." "பின் ஏன் உளறுகிறீர்கள்?" உளறலா அல்லவா என்பதை ஊதிய பின்பு அறிந்து கொள்வாய்.

சரியென்று அவள் ஊதப்போனாள். "சற்று இரு" என்று அவளைத் தடை செய்த இளையபல்லவன், "மஞ்சளழகி! இங்கு யாருமில்லை. சொல்வதைக் கவனமாய்க் கேள். என் செய்கை ஒன்றும் இன்னும் சில நாட்களுக்கு விளங்காது. ஆனால் செய்யப்படும் எதுவும் உன் நன்மைக்காகச் செய்யப்படுகிறதென் [illegible] வைத்துக்கொள். [illegible] அமாவாசையன்று பெரு



காலத்தின் பதிவு 144

நிகழ்ச்சிகள் இந்த அக்ஷயமுனையில் ஏற்படும். ஆனால் அவற்றைப் பார்க்க நீ இருக்கமாட்டாய். நீ வரும்போது சிறப்புடன் வருவாய். அமாவாசை இரவில் உனக்குக் கொடுக்கப்படும் மதுவைப் முழுவதுமாக அருந்திவிடு" என்றான்.

அவள் ஏதோ சொல்ல முயன்றாள். "எதுவும் விளங்காது உனக்கு. ஆனால் சொல்கிறபடி செய். இப்போது ஊது. இந்த ஊதலைக் கேட்டு வருபவரிடம் சிப்பி இந்த மரத்தடியில் கிடந்ததாகக் கூறிவிடு. சரி ஊது. நான் வருகிறேன்," என்று கூறிவிட்டுச் சென்றான் இளையபல்லவன். அவன் போன சில விநாடிகளுக்கெல்லாம் அந்தச் சிப்பியை வாயில் வைத்து இரு முறை ஊதினாள் அவள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CINEMA

## 15 ஆண்டுகள் கடந்தும் இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறது

## விண்ணைத் தாண்டி வருவாயா



கௌதம் மேனன் இயக்கத்தில் சிம்பு, த்ரிஷா நடிப்பில் வெளியான **"விண்ணைத் தாண்டி வருவாயா"** படம் வெளியாகி 15 ஆண்டுகள் முடிந்திருக்கிறது.

ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் அழகான பாடல்களுடன் வெளியான இந்தத் திரைப்படம், ரசிகர்களின் மனதை வென்றது. இன்றளவும் காதலர்களின் முதன்மைத் திரைப்படத் தேர்வாக இருக்கிறது. அதுவும் திரையரங்குகளில்!

தொடர்ந்து இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன் மற்றும் த்ரிஷா விண்ணைத் தாண்டி வருவாயா திரைப்படம் குறித்துப் பேசியுள்ளனர்.

**த்ரிஷா பேசியது...**

இந்தப் படம் குறித்து வீடியோ வெளியிட்டுள்ள நடிகை த்ரிஷா, வி.டி.வி குழுவினருக்கு வாழ்த்துகள். என்னுடைய கேரியரின் மிகச் சிறந்த படங்களில் ஒன்றைக் கொடுத்ததற்கு கௌதமுக்கு நன்றி. இன்றுவரை ஓடிக் கொண்டிருக்கும் படத்தில் ஒரு பகுதியாக இருப்பது மிகப்பெரிய கௌரவம்.

இந்தப் படத்தை உருவாக்கியது சிறப்பானது. நான் இதைப் பலமுறை சொல்லியிருக்கிறேன். ஒரு படத்தை உருவாக்கும்போது நாம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தால் அந்தத் திரைப்படம் எப்படியோ சிறந்ததாக உருவாகி விடும். அதனால்தான் வி.டி.வி என் இதயத்துக்கு நெருக்கமான படம்.

அந்த மொத்த அனுபவத்துக்காகவும் அது மிக நெருக்கமானது. நாங்கள் செட்டில் மகிழ்ச்சியாக இருந்தோம். நல்ல நபர்களுடன் பணியாற்றினேன். அனைத்திருக்கும் நன்றி.

இன்றளவும் ஜெஸ்சியை உயிர்ப்புடன் வைத்திருக்கும் ரசிகர்களுக்கும், சுற்றத்தவருக்கும் சிறப்பு நன்றிகள். "இப்போதும் எனக்கு ஜெஸ்ஸி குறித்து மீம்களை அனுப்புகின்றனர். தனிப்பட்ட மெஸ்ஸேஜ்களை அனுப்புகின்றனர். எல்லோருக்கும் நன்றி" எனப் பேசியுள்ளார்.




## தனுஷ்டன் ஜோடி சேரும் மமிதா பைஜு



சமீபத்தில் தனுஷ் இயக்கத்தில் உருவான **"நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்"** திரைப்படம் வெளி வந்து ஓரளவு நல்ல வரவேற்பைப் பெற்றது.

இதைத் தொடர்ந்து இவர் இயக்கத்தில் அடுத்ததாக **"இட்லி கடை"** படம் ரிலீஸுக்கு தயாராகி வருகிறது. குபேரா மற்றும் இட்லி கடை படங்களில் நடித்து முடித்துள்ள தனுஷ் தற்போது ஆனந்த் எல்ராய் இயக்கத்தில் உருவாகி வரும் தேரே இஷ்க் மெயின் திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

விக்னேஷ் ராஜா இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் உருவாகவுள்ள படம் குறித்து ஏற்கனவே தகவல்கள் வெளிவந்த நிலையில், தற்போது இப்படத்தின் ஹீரோயின் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, 23 வயதில் மலையாளம் மற்றும் தமிழில் கலக்கிக்கொண்டிருக்கும், இளம் நடிகை மமிதா பைஜு தான் இப்படத்தில் கதாநாயகியாக நடிக்கப் போவதாக கூறப்படுகிறது.

மமிதா பைஜு தற்போது தமிழில் பிரதீப் ரங்கநாதனுடன் ஒரு படம், விஜய்யின் ஜனநாயகன் மற்றும் விஷ்னு விஷாலின் இரண்டு வானம் ஆகிய திரைப்படங்களில் நடித்துக் கொண்டு இருக்கிறார்.

## கூலி பட ஷூட்டிங் நிறைவு



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் முதல் முறையாக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்து வெளிவர உள்ள திரைப்படம் கூலி. சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புடன் உருவான இப்படத்தில் ரஜினியுடன் இணைந்து நாகர்ஜுனா, சத்யராஜ், ஸ்ருதி ஹாசன், சோப்பின் சபீர், உபேந்திரா ஆகியோர் நடித்து வருகிறார்கள்.

மேலும், இப்படத்தில் நடிகை பூஜா ஹெக்டே ஒரே ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போட்டுள்ளார். இந்நிலையில், கூலி படத்தின் ஷூட்டிங் குறித்து ஒரு அதிரடி அப்டேட் வெளியாகி உள்ளது.

அதன்படி, தற்போது படப்பிடிப்பு நிறைவடைந்து விட்டதாகப் படக்குழு அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளனர். மேலும், படத்தின் மேக்கிங் வீடியோவை வெளியிட்டுள்ளனர். இந்த வீடியோ வெளியாகி இணையத்தில் வைரலாகி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

442

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# எமக்கு ஏற்படும் கோபத்தை என்ன செய்யலாம்?


நாம் கோபப்படுவது என்பது மிகவும் ஆபத்தானது. இது, எம்முடைய மனநிலையையும் குழப்பி, மற்றவர்களின் மனநிலையையும் குழப்பி, எம்மை நோயாளியாக்கி மற்றவர்களையும் நோயாளியாக்கும் அளவிற்கு ஆபத்தானதாகும். இந்த கோபம் என்பது ஒரு சமூக நோயாக உணரப்படுகிறது. ஒவ்வொரு தடவையும் கோபப்படும்போது நாம் தோற்று விடுகிறோம்.

எம்மை கோபப்படுத்திய அந்த சூழ்நிலை, எம்மை வெற்றி கொள்கிறது. கோபப்படும் நிலையில் எமது புத்திக்கூர்மை மங்கி, சாதுரியம் குன்றி, மனதாலும் உடலாலும் ஒரு பிழையான தீர்மானத்தை எடுக்கக்கூடிய அளவிற்கு பலவீனமான நிலைக்கு தள்ளப்படுகின்றோம். இதைத் தான் ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். பொதுவாக, நாம் பலவீனமான நிலையில் இருக்கும் போது, இலகுவில் கோபப்படக்கூடியவர்களாக இருக்கிறோம்.

உதாரணமாக, நாம் பசியுடன் இருக்கும் போது, களைப்பாக இருக்கும் போது, நோய்வாய்ப்பட்டு இருக்கும் போது அல்லது நித்திரைக் குழப்பத்தில் இருக்கும் போது நாம் இலகுவில் கோபப்படக்கூடியவர்களாக இருக்கிறோம். அதாவது கோபமானது பலவீனத்தின் வெளிப்பாடு ஆகும். எமது, கோபத்தினால் பிறரை அடக்கி வைப்பது உண்மையில் பலமான ஒரு செயல் அல்ல. கோபமான சூழ்நிலையிலே எம்மையும் எம் நாவையும் அடக்கிக் கொள்வது தான் உண்மையான மனோபலம் என்று அறியப்படுகிறது.

நாய்க்கு கூட கோபம் வரும். இதில், நமக்கு கோபம் வருவதில் என்ன கெட்டித்தனம் இருக்கிறது என நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விலங்குகளுக்கு சிரிக்கத் தெரியாது, சிந்திக்க தெரியாது. இவை தான் மனிதனுக்கு காணப்படும் தனித்துவமான பண்புகள் ஆகும்.

சிலரைத் தவறாக புரிந்து கொண்டு கோபப்பட்டு பிரிந்து விடுகிறோம். வேறு சில தவறானவர்களை நாம் சரியாக புரிந்து கொள்ளாமல், அவர்களுடன் நெருங்கி பழகி இறுதியில் கோபப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவை அனைத்தும் எமது அறியாமையின் வெளிப்பாடு ஆகும்.



கோபத்தை கையாள, நாம் பல விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது. கற்றல் என்பது புத்தகக்கல்வி மட்டுமல்ல. எமது நாளாந்த வாழ்வை, பல இடையூறுகளுக்கிடையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் போது காலம் எமக்கு பலவற்றை கற்றுத் தரும்.

எம்மை மீறி ஏற்படும் கோபம், இழப்புகள், தோல்விகள், வறுமை, பசி கூட எமக்கு பலவற்றை கற்றுத் தருகிறது. இவற்றினால் ஏற்படும் அனுபவ முதிர்ச்சி எமக்கு, கோபத்தைக் கையாளும் வல்லமையை கற்றுத் தருகிறது.

எமக்கு பல சிக்கல்கள் ஏற்படுவதற்கு, எமது கோபப்படும் தன்மையும், வாதிடும் தன்மையுமே அடிப்படையான காரணங்களாக இருக்கின்றன.

ஒரு விடயத்தை உணரக்கூடிய திறமைசாலிகளிடம் மட்டும் வாதிட்டு எமது கருத்தை வலியுறுத்துவதே நல்லது. அவ்வாறானவர்கள் அல்ல என்று நாம் கருதுபவர்களுடன் வாதிடுவதனால் எதிர்மறையான விளைவுகளே ஏற்படும். இதனால், நாமும் நொந்து, மற்றவர்களையும் காயப்படுத்தக்கூடிய நிலை ஏற்படுகின்றது.

நாம் அமைதியாக இருப்பதால், ஒரு விடயத்தை ஆமோதிக்கிறோம் என்று அர்த்தமல்ல. நாம் பேசி பயனில்லை என்று கருதும் போது அல்லது உண்மை புரிவதற்கு காலம் கனிய வேண்டும் என்ற நிலை இருக்கும் போது அமைதியாக இருப்பதே பொருத்தமான ஒரு செயலாகும். வாழ்விலே எமக்கு ஏற்படும் ஒவ்வொரு இடையூறுகளுடனும் நாம் மோதிக்கொண்டிருக்க முடியாது. நம்மை துரத்தி வரும் நாய்கள் ஒவ்வொன்றிற்கும் நாம் கல் எறிந்து துரத்த முயன்றால் எம் இலக்கை அடைய முடியாது. எம் ஒவ்வொருவரினதும் வாழ்க்கை பயணத்தின் போதும் நிச்சயமாக பல கல்லடிகள் விழும். அந்தக் கற்களை திருப்பி எடுத்து எறிந்து கோபப்படுவது அர்த்தமற்றது.

அது புத்திசாதூரியமும் ஆகாது.

எனவே அந்த கற்களைக் கொண்டே நாம் நமது பாதையைச் செப்பனிட வேண்டும். அதாவது எமக்கு ஏற்படும் ஒவ்வொரு இடையூறுகளையும் எமக்கு சாதகமாக மாற்றுவது எப்படி என்பதை கற்றுக்கொள்ள வேண்டும். இதன்போது கோபப்படுவது என்பது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

எனவே அவர்களது தனித்துவ குணாதிசயங்களோடு கேட்டுக் கொண்டு ஏற்றுக்கொண்டு பயணிக்கப் பழக்கப்பட வேண்டும். கோபப்படுவதால் என்ன நன்மைகள் ஏற்படுகின்றன என சிந்திப்போமானால், பதிலடி கொடுத்தோம் என்ற குரூர மனதிருப்தியை விட வேறு எதையும் பெற்றுவிட முடியாது.

இதனால் நாம் பல நண்பர்களை இழந்து விடுகிறோம், பல உறவுகள் முறிந்து போகின்றன, எமது ஆளுமை அற்றுப்போகின்றது, எமது நேரம் விரயமாகிறது. இதனால் பலர் பல துன்பங்களுக்கு உள்ளாகின்றனர். அத்துடன் இது எம்மில் பல சுகாதார பிரச்சினைகளையும் ஏற்படுத்தி நிற்கிறது. உதாரணமாக, உயர் குருதி அமுக்கம், இருதய நோய்கள், மாரடைப்பு, மனக்குழப்பங்கள் போன்ற பல சுகாதார பிரச்சினைகளை எமக்கு இந்தக் கோபம் ஏற்படுத்துகிறது.

எமது கோபம் மாறிய பின், நாம் செய்த தவறுகளை எம்மால் பல தடவை உணரக்கூடியதாக இருக்கிறது. ஒரு சில சமயங்களில் இது காலம் கடந்து உணரக்கூடியதாகவும் இருக்கிறது. எனவே, நாம் கோபப்படுவதைக் குறைத்துக் கொள்வது எவ்வாறு என சிந்திப்பதிலே அக்கறை செலுத்த வேண்டும்.

கோபத்தை குறைத்துக்கொள்ளும் முயற்சிகளிலே ஆர்வம் காட்ட வேண்டும். எந்தெந்த வழிமுறைகள் மூலம் கோபத்தை குறைத்துக் கொள்ளலாம் என்பது சம்பந்தமாக சிந்தித்து, அவற்றை நடைமுறைப் படுத்தி, கோபத்தை தவிர்த்து வாழப் பழகுவோம்.

**Dr. சி. சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்,**
**யாழ். போதனா**
**வைத்தியசாலை,**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துங்கள்

## அல்வாய் பயிர்ச் செய்கையாளர்கள் கோரிக்கை

(கரணவாய்)

அல்வாய் கிழக்குப் பகுதியிலுள்ள தோட்டங்களில் கட்டாக்காலி மாடுகள் புகுந்து அழிவை ஏற்படுத்தி வருவதாக பயிர்ச் செய்கையாளர்கள் விசனம் வெளியிட்டனர்.

உரிய அதிகாரிகளுக்கு பல தடவை தெரியப் படுத்தியும் எந்தவிதமான நடவடிக்கையும் இது வரை மேற்கொள்ளவில்லை.

இனியும் தாமதிக்காது கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துமாறு அப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-8-60)

# வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர கொடியேற்றம் காண்போம்

24.03.2025 ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானை திருமுறை ஓதி எம்பெருமான் திருவடிகளைத் சிரம்மேற்சூடி வணங்கி காரைநகர் மருதடி விநாயகர், திக்கரை முருகன், ஈழத்துச் சிதம்பரம் ஆலயம் திருவிழா காண்போம். மாணிக்கவாசகர் திருவாசகம் ஓதுவோம்.

**தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்**
**ஐயம் புகுவரால் அன்னே என்னும்**
**ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்**
**நையுமிது வென்னே அன்னே என்னும்.**

திருவாசகம்-தேன்-17-346

தாயை நோக்கி மகள் கூறுவதாக அருட் பதிகம் அன்னைப்பத்து. இறைவன் அன்பர் பொருட்டு, **போக, யோக** வடிவம் தாங்கி தாருகா வனத்து முனிவர் பெண்டிரை பிச்சை ஏற்பானாக மயக்கியது போல, **அன்பர்கள் பால் எழுந்தருளி வந்து உடல் பொருள், ஆவி மூன்றையும்** அவர் மனத்தை பிணித்தல் குறிப்பது.

கொடியேற்றமாகிய விழா உயிர்கள் நிலையாமையுணர்ந்து தூல உடம்பின் பற்றறுத்தலை இறைவனிடத்து பேரன்பு கொண்டு, விழாக்களைத் தரிசிக்கச் செல்லுவோர் ஆசாரசீலராக **விழா உண்மைப் பொருளை உணர்ந்து,** இயன்றளவு நிவேதனப் பொருட்களுடன் ஆசாரியாரைக் குருவாக எண்ணி வழிபட்டு அவர் செய்யும் **தம்ப, விம்ப, கும்ப பூசைகளை மெய்யன்போடு தரிசிப்போம்.**

திருமூலர்-திருமந்திரம்-மும்மலம் ஒழிந்த இடம் திருவதிகை-343

**அப்பணி செஞ்சடையாதி புராதனன்**
**முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கள்**
**முப்புரமாவது மும்மல காரியம்**
**அப்புர மெய்தமை யாரறி வாரே**

கங்கை நீரை அணிந்துள்ள சிவந்த சடையை உடைய **ஈழத்தச் சிதம்பரம், வைத்தீஸ்வரன், ஆணவம், கன்மம், மாயை** ஆகிய மும்மலங்களை அழித்தலாகும்.

**கொடியேற்ற விழா.** மும்மலத்தில மூழ்கிக் கிடக்கும் உயிர், ஆசாரியாருடைய அருளாலும் தீக்கைக் கிரமத்தினாலும் பாசத்தனின்றும் நீங்கி சிவஞானத்தை பொருந்திய பதியின் திருவடியை அடையும் முறைமையைக் காட்டும். இவ் விழாவிற் **கொடிமரம்** பதியாகிய சிவத்தைக் குறிக்கும். அதில் ஏற்றப்படும் **கொடிச்சீலை** பசுவாகிய உயிரைக் குறிப்பதாகும். கொடிச்சீலையோடு சேர்ந்திருக்கும் **தருப்பைக்கயிறு** உயிரை வருத்தும் பாசமாகும். கொடியேற்ற விழாவிற் தருப்பைக் கயிற்றுடன் கொடிச்சீலையைக் கொடிமரத்திற் சுற்றுவது முத்தி நிலையிற் பாசம் ஒடுங்க உயிர் சிவத்துடன் கலந்து பேரின்பமடையும் என்பதையும் அந்த நிலையிற் சிவமும் உயிரும் இரண்டறக் கலந்த ஒரு பொருளாம் என்பதைக் குறிக்கும். இவ் வுண்மையை உணர்ந்து வழிபடும் அடியவர்களாகிய சீடர்களுக்கும் கொடியேற்றும் ஆசாரியாராகிய குருக்கள் தமது கிரியைகளினால் மல நீக்கமுண்டாகிச் சிவத்தன்மையருளுதலைக் குறிக்கும்.

அறிவிக்க அறிவதே ஆன்மா!
இறைவன் தானாக அறிவான்!
ஆலய பழமைகளைப் பேணுவோம்
முன்னோர் வழியில் பணிவோம்.

**தாயாகிய சிவசத்தியும் தந்தையாகிய சிவமும் வழிபடும் உயிர்களுக்கு நிலையான வீடுபேற்றை சிவத்தன்மையடையச் செய்து உய்வித்தலே திருவிழாக்களைச் செய்வதும், தரிசிப்பதும் ஆகும்.**

(சி-2517)

**க.கு.க சிவபாலன்,**
**போசகர்,**
**ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**



# Keells இப்போது யாழ்ப்பாணத்தில்!

Keells, வட மாகாணத்தில் தனது முதல் கிளையைத் திறந்துள்ளது. தரம், மலிவு விலை, பல தரப்பட்ட தயாரிப்புகள், சிறந்த வசதி மற்றும் சமூக மேம்பாட்டிற்கான அதன் உறுதிப்பாட்டை யாழ்ப்பாணத்திற்கும் நகர்த்துகின்றது.

யாழ்ப்பாணத்தில் எமது முதலாவது பல்பொருள் அங்காடி இதுவாகும். யாழ்ப்பாணத்தில் உள்ள Keells சேகரிப்பு மையம் ஒவ்வொரு மாதமும் சுமார் 200,000 கிலோ புதிய விளைபொருட்களை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. நம் நாட்டு விவசாயிகளுக்கு ஆதரவளிக்கும் அதே வேளையில் உயர்தரப் பொருட்களின் நிலையான விநியோகத்தையும் இதன் மூலம் உறுதி செய்கின்றது.

யாழ்.நகரின் மையப்பகுதியில் ஸ்டென்லி சாலை மற்றும் மணிக்கூட்டுக் கோபுர சந்திக்கு அருகில் அமைந்துள்ள எமது புதிய கிளையானது, ஏராளமான வாகனத் தரிப்பிட வசதியுடனும், பல நுழைவாயில்களிலிருந்து எளிதாக அணுகக்கூடிய வசதிகளையும் கொண்டுள்ளது.




விளம்பர விபரணம்

**உள்நாட்டு சிறப்பம்சங்களுடன் கூடிய ஒழுங்கமைக்கப்பட்ட ஷொப்பிங் அனுபவம்**

Keells யாழ்ப்பாணக் கிளை, இந்தப் பிராந்தியத்திலிருந்து நேரடியாகப் பெறப்படும் புதிய விளை பொருட்கள், கடல் உணவுகள், இறைச்சிகள் மற்றும் சிறப்புப் பொருட்களின் விரிவானதோர் தெரிவை வழங்குகின்றது. வாடிக்கையாளர்கள் இப்போது இப்புதிய அனுபவத்துடன் இணைந்துகொள்ளலாம்.

• யாழ்ப்பாணத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பழங்கள், காய்கறிகள், இறைச்சிகள் மற்றும் கடல் உணவுகள், உள்நாட்டு விவசாயிகள் மற்றும் விநியோகஸ்தர்களை ஆதரிக்கும் அதே வேளையில் சிறந்த தரத்தையும் உறுதி செய்கின்றன.

• சிறப்பு அரிசி வகைகள், மா மற்றும் மசாலாப் பொருட்கள்.

• கூடுதல் வசதிக்காக செல்ஃப் செக்அவுட் கவுண்டர்கள் உட்பட ஒரு அதிநவீன ஷொப்பிங் அனுபவம்.

• ஒன்லைன் ஓர்டர் மற்றும் டெலிவரி வசதி,

• நெக்சஸ் லோயல்டி உறுப்பினர்களுக்கு பல சலுகைகளுடன் தினசரி சேமிப்பு.

கீல்ஸ் தனது புகழ்பெற்ற முன்தயார் செய்த உணவு வகைகளை அறிமுகப் படுத்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றது. காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவுத் தெரிவுகளுடன் பேக்கரி டிலைட்கள், பீட்சாக்கள், பர்கர்கள், ரோஸ்ட் சிக்கன் மற்றும் இன்சுவை விருந்துகளின் அற்புதமான தெரிவுகளையும் வழங்குகின்றது. கொஃபி, மில்க் ஷேக்குகள் மற்றும் வொஃபள்ஸ் ஆகியவற்றைக் கொண்ட Kafé வாடிக்கையாளர்கள் சற்று இளைப்பாறி, தங்களுக்குப் பிடித்த சிற்றுண்டிகளை அனுபவிக்கும் சிறந்த ஸ்தானத்தையும் வழங்குகின்றது.

**வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி மூலம் வட மாகாணத்தை மென்மேலும் வலுப்படுத்தல்**

யாழ்ப்பாணத்தில் Keells இன் இருப்புஃசில்லறை விற்பனை முறைக்கு அப்பாற்பட்டது. இது சமூகத்திற்கு ஒரு முதலீடாவதுடன், புதிய வாய்ப்புகளை உருவாக்கி பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்துகின்றது.

80இற்கும் அதிகமானோரைக் கொண்ட விற்பனை நிலையக் குழு முழுவதுமாக வடக்கு மாகாணத்திலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, அர்த்தம் பொதிந்த வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வளர்ச்சி வாய்ப்புகளை வழங்குகின்றது.

• தொடர்ச்சியான பயிற்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களினால் ஊழியர்கள் மதிப்புமிக்க திறன்களையும் தொழிற்துறை முன்னேற்றத்தையும் பெறுவதை உறுதி செய்கின்றன.

• யாழ்ப்பாணம் சேகரிப்பு மையம் புதிய விளைபொருட்களை ஆதாரமாகக் கொண்டு, நம் நாட்டு விவசாயிகள் மற்றும் விநியோகஸ்தர்களை நேரடியாக ஆதரிப்பதில், தொடர்ந்து முக்கிய பங்கினை வகிக்கின்றது.

• யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்ட வணிகங்கள் மற்றும் தொழில் முனைவோருடன் இணைந்து சந்தைப் படுத்தல் பிரசாரத்தை ஆரம்பித்து உட்சேர்ந்த மற்றும் சமூகம் சார்ந்த அணுகுமுறையை உறுதி செய்துள்ளது.

**நிலைப்பேண்தகைமை மற்றும் சமூக மேம்பாட்டிற்கான அர்ப்பணிப்பு**

• யாழ்ப்பாணம் முழுவதும் ஏழு பிளாஸ்ரிக் மீள்சுழற்சி தொட்டி இடங்களுடன் கழிவு மேலாண்மை மற்றும் மீள்சுழற்சி திட்டங்கள்.

• நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் மூன்று பாடசாலைகளுக்குத் தற்போது பயனளிக்கும் ஆரம்ப பாடசாலை உணவுத் திட்டங்கள், மேலும் விரிவாக்கத் திட்டங்களுடன்.

• சமூக நல்வாழ்வுக்கான Keells இன் நீண்டகால அர்ப்பணிப்புடன் ஒத்துப்போகும் கூடுதல் சமூக பொறுப்புணர்வு முயற்சிகள்.

**யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு அன்பு மிகுந்த இனிய வரவேற்பு.**

யாழ்ப்பாண மக்களின் அன்பான வரவேற்புக்கு Keells மிகுந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது. மேலும் பிராந்தியத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற ஆவலுடன் காத்திருக்கின்றது. பெப்ரவரி நடுப் பகுதியில் தொடங்கப்பட்ட உள்நாட்டு சந்தைப்படுத்தல் பிரசாரம், திறப்பு விழாவிற்கான எதிர்பார்ப்பையும் உற்சாகத்தையும் வெற்றிகரமாக உருவாக்கியதுடன், பாரம்பரிய யாழ்ப்பாண கலாசார விழுமியங்கள் மற்றும் மதிப்புமிக்க நலம் விரும்பிகளின் பங்களிப்புடன் ஒரு பிரமாண்டமான விழாவாக கொண்டாடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















யாழ்.பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. கடந்த 19-22 ஆம் திகதி வரை 13 அமர்வுகளாக நடைபெற்ற இந்தப் பட்டமளிப்பு வைபவத்தில் 3,920 மாணவர்கள் பட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஏற்பாட்டில், சபை நிதியில் புதுக்குடியிருப்பு சந்தையினுள் அமைக்கப்பட்ட கடைத் தொகுதி மற்றும் உலக வங்கியின் நிதியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கடைத் தொகுதி என்பனவற்றை ஆளுநர் திறந்து வைத்தார்.

அத்துடன்புதுக்குடியிருப்பு பிரதேச சபை மண்டபத்தினுள், திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வூட்டும் அங்குரார்ப்பண நிகழ்வும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.







மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

# மாவட்டங்களுக்கிடையிலான வேக நடைப்போட்டி

## முதல் மூன்று இடங்களையும் கைப்பற்றிய யாழ்.வீராங்கனைகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மாவட்ட செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வேக நடைப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் யாழ்.மாவட்ட வீராங்கனைகள் கைப்பற்றினர்.

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தினால் நடாத்தப்படும் மாவட்டங்களுக்கு இடையிலான மாகாண மட்ட வேக நடைப் போட்டி நேற்று சனிக்கிழமை மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான போட்டியில் முதல் 6 இடங்களைப் பெறும் வீராங்கனைகள் தேசிய மட்ட போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர். இதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த ஆர்.டனுசியா முதலாமிடத்தையும், யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.தமிழரசி இரண்டாமிடத்தையும், யாழ் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர்.கௌசியா மூன்றாமிடத்தையும், மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஏ.எஸ். பில்லிகிறேஸ் நான்காமிடத்தையும், மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர்.ஏ.அனுஜா ரிவேல் ஐந்தாமிடத்தையும், மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கம்ஷிகா ஆறாமிடத்தையும் பெற்றனர்.

(நி-8-90)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு காரியத்தையும் உள்ளன்போடு செய்யுங்கள்; பின் வேறுவிதமாகச் செய்ய மனம் ஒருபோதும் விரும்பாது. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காலம் தாமதமாகலாமேயன்றி மற்றும்படி எவரும் தப்ப முடியாது

மனிதப் பிறவி என்பது மிகவும் உன்னதமானது. இதற்குக் காரணம் மனிதன் மட்டுமே பகுத்தறிவு எனும் ஆறாவது அறிவுக்குச் சொந்தக்காரன்.

எனினும் ஐந்தறிவு படைத்த விலங்குகளை விட மிக மோசமாக நடந்து கொள்கின்ற மனிதர்கள் உள்ளனர்.

ஆறாவது அறிவைப் பெற்றிருந்தும் ஐந்தறிவு கொண்ட மிருகங்கள் போல நடந்து கொள்வதற்குக் காரணம் யாது என்று ஆராயும்போதுதான் கன்மா பற்றிய அறிவு அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பது தெரிய வரும்.

ஆம், மனிதப் பிறவி எடுத்தவர்கள் அறம் பற்றிய கருத்துக்களைக் கற்றறிய வேண்டும்.

இதற்கும் மேலாக, மனித வாழ்வைச் செம்மைப்படுத்தும் பொருட்டு ஞானிகளாலும் யோகிகளாலும் நமக்கு ஈந்தளிக்கப்பட்ட வேதங்களை – இதிகாசங்களை – நீதி நூல்களை – கருடபுராணம் போன்ற பாவத்தின் பலாபலனை போதிக்கின்ற அற நூல்களை கற்றறிய வேண்டும்.

கற்பதற்குப் போதிய வாய்ப்பு இல்லையாயினும் கேட்டேனும் அறிதல் நன்று.

ஆம், கன்மவினை என்பது நாம் செய்த செயலுக்கான விளைவைக் குறிப்பதாகும்.

அதாவது நல்வினை, தீவினை என்பதில் எதை நாம் பின்பற்றுகின்றோமோ அதற்கு ஏற்றதாய், எமது அனுபவிப்பும் அமையும்.

தசரதன் மிகச் சிறந்த சக்கரவர்த்தி. மக்களின் மனம் நோகாமல் ஆட்சி செய்தவன். இருந்தும் தெரியாமல் செய்த குற்றம் அவனைப் புத்திர சோகத்தால் கொல்கிறது.

என்றோ ஒருநாள் முனிபுங்கவர் இட்ட சாபம் இராமபிரானின் பட்டாபிசேகம் வரை காத்திருக்கிறது. சாபம் எனும் கன்மா கூனி எனும் பாத்திரத்தை உருவாக்குகிறது. தாயாக இருந்து இராமனை வளர்த்த கைகேயியின் மனதை மாற்றுகிறது.

இராமர் காடேகிறார். தன் மகன் காடு சென்றான் என்ற புத்திர சோகம் தசரதனை வதைக்க, கன்ம விதிப்பயனாக அவர் இறந்து போகிறார்.

இப்போது பாருங்கள்; பட்டலந்தயில் நடந்த சித்திரவதை சுமார் நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னதாக தாக்கத் தொடங்கியுள்ளது.

பொருளாதார மந்தத்தின்போது ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று நாட்டை மீட்டெடுக்கப் பாடுபட்ட ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கவில்லை. இது ஏன் தெரியுமா? ஜனாதிபதியாக ரணில் வெற்றி பெற்றால், பட்டலந்தயில் வதைபட்டவர்களின் கண்ணீருக்குப் பதில் சொல்வது யார்?

இதுபோலத்தான் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இப்போது சிறையில்.

நிரபராதிகளைச் சிறையில் அடைத்த தென் னக்கோனை சிறையில் அடைப்பதாக இருந் தால், ரணில் ஜனாதிபதியாக வெல்ல முடியுமா என்ன.

இதுவே கன்மா. இதனை உணர்ந்தால் மனிதன் ஒருபோதும் பாவம் செய்யமாட்டான்.

# பனைசார் உற்பத்தியாளர்களின் நிதி நெருக்கடிக்கு விரைவில் தீர்வு

## பனை அபிவிருத்தி சபை நடவடிக்கை

*(சாவகச்சேரி)*

பனைசார் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்குகின்ற நிதி நெருக்கடி நிலைமையைப் போக்குவதற்கு வங்கிகள் ஊடாக அவர்களுக்கு கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்,

பதனீர் உற்பத்தியாளர்கள், கைப்பணியாளர்கள் உள்ளிட்ட பனைசார் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கிவருகின்ற நிதித் தேவைகளை நிவர்த்தி செய்யும் விதத்தில் அண்மையில் வங்கிகளுடன் சந்திப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அதன் முதற்கட்டமாக இலங்கை வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி அதிகாரிகளுடன் தனித்தனியே பனை அபிவிருத்திச் சபை சந்திப்பை ஏற்படுத்தி சாதகமான முடிவையும் பெற்றுள்ளது.

இதன்போது பனைசார் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கிவருகின்ற நிதித் தேவைகளுக்கான கடன் வசதிகளை வழங்க வங்கிகள் இணக்கம் தெரிவித்துள்ளன. அத்தோடு குறைந்த வட்டி விகிதத்தில் கடனைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனூடாக உற்பத்தியாளர்களுடைய நிதி நெருக்கடி நிலைமை தீர்க்கப்படுவதுடன் - எதிர்காலத் தேவை கருதிய அதிக உற்பத்திகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு நடவடிக்கையை பனை அபிவிருத்திச்சபை முதற்தடவையாக மேற்கொண்டுள்ளது.

இதில் குறிப்பாக பெண் தொழில் முனைவோருக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

பொருத்தமான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கடனுதவி வழங்கப்படும்.

இதன் போது இரண்டு இலட்சம் ரூபாய் வரை கடனுதவிகளைப் பெற முடியும் எனவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார். *(நி-8-30)*

# யாழ். நூலக எரிப்புத் தொடர்பிலும் விசாரணை செய்யுங்கள்

## இளங்குமரன் எம்.பி கோரிக்கை

*(கொழும்பு)*

பட்டலந்த வதை முகாம் தொடர்பில் விசாரணை நடத்துவதைப் போன்று யாழ். நூலகம் எரிக்கப்பட்டமை தொடர்பிலும் குழுவை அமைத்து விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு மாகாணம் என்பது கல்வியில் தலைசிறந்து விளங்குகின்றது. இந்நிலையில் ஜனாதிபதியினால் வரவுசெலவுத் திட்டத்தில் யாழ். நூலகத்திற்கு 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியமைக்காக நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன். எமது நாட்டில் 30 வருடங்களாக நிலவிய யுத்தத்திற்கு மூலகாரணங்களில் ஒன்றாக யாழ். நூலக எரிப்பு உள்ளது.

இப்போது பட்டலந்த வதை முகாம் தொடர்பில் பேசுகின்றனர். இங்கு தமிழ், சிங்கள இளைஞர்களின் இறப்புக்குக் காரணமானவர்களே அன்றைய காலத்தில் கல்வி அமைச்சராக இருந்த போது எமது யாழ். நூலகத்தையும் தமிழர்களின் உணர்வுகளையும் எரித்து நாசமாக்கினர். இதற்கான விசாரணையும் தேவையாகும்.

30 வருடங்களாக நாங்கள் யுத்தத்தால் பின் தங்கியிருக்கின்றோம். தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றி சிங்கள இளைஞர்களும் இந்த யுத்தத்திற்குள் தள்ளப்பட்டு பல இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதனால் பட்டலந்த வதைமுகாம் போன்று யாழ். நூலகத்தை எரித்தமை தொடர்பிலும் விசாரணைக் குழுவை அமைத்து நீதியை தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சபையில் வேண்டிக்கொள்கின்றேன் எனத் தெரிவித்தார். (நி-8)

# மணல் ஏலவிற்பனை

*(முல்லைத்தீவு)*

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட மணல் பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 03.04.2025 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என நீதிமன்றப்பதிவாளர் அறிவித்துள்ளார். *(நி-8)*

# போதையில் அடாவடி இளைஞன் கைது

## ஊர்காவற்துறையில் சம்பவம்

*(ஊர்காவற்துறை)*

போதையில் தனது குடும்பத்தினருடன் தகராறில் ஈடுபட்ட இளைஞன் ஊர்காவற்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடும்பத்தினரால் ஊர்காவற்துறைப் பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் அதே பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட குறித்த இளைஞன் கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுக்கு அடிமையானவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஊர்காவற்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். *(ம-7)*

# கணவனால் மனைவி வெட்டிப் படுகொலை

## நிர்க்கதியான பிள்ளைகள்

குடும்பத் தகராறு காரணமாக கணவன் தனது மனைவியை வெட்டிக் கொலை செய்த சம்பவம் ரத்தொட்டைப் பொலிஸ் பிரிவின் கைகாவல இசுருகம பகுதியில் பதிவாகியுள்ளது.

நேற்று (22) அதிகாலை 5.00 மணியளவில் இந்தப் பயங்கரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்ட மனைவி மற்றும் கொலையைச் செய்ததாகக் கூறப்படும் கணவர் இருவரும் வைத்தியசாலையில் ஊழியர்களாக பணிபுரிந்தவர்கள் எனவும் குறித்த தம்பதியினருக்கு இரு பிள்ளைகள் (மகள்(வயது-11), மகன் (வயது-13)) இருப்பதும் தெரியவந்துள்ளது.

கொலைக்குப் பிறகு மறைந்திருந்த சந்தேக நபரான கணவர், ரத்தொட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் ரத்தொட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்ததான நிகழ்வு

மாகாண உள்ளகக் கணக்காய்வு அலுவலர் அமரர் கைலாசபதி ஜெயக்காந்தனின் முதலாம் ஆண்டு நினைவாக இடம்பெறும் "இரத்ததான நிகழ்வு" நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் மதியம் 12 மணி வரை கைதடி, மாகாணசபை வளாகத்தின் பேரவைச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என வடமாகாண உள்ளகக் கணக்காய்வு ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (நி-8-60)

## யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல. 81 பிறவுண்வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா, சளித்தொல்லை நீங்க, தைராய்டு பிரச்சினை தீர எளியமுறை உடற்பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் சு.மீரா அவர்கள் வழங்குவார்கள். தொடர்புகளுக்கு 076 857 1395. (நி-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 160 | 180 | 150-200 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 450 | 500 | 450-500 | 600 |
| தக்காளி | 180 | 180 | 250 | 180-200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 250 | 200 | 200 |
| கோவா | 300 | 200 | 300 | 250 | 350 |
| கரட் | 600 | 600 | 800 | 500 | 600 |
| பூசணி | 140 | 120 | 140 | 100-120 | 150 |
| புடோல் | 150 | 150 | 150 | 160 | 200 |
| வாழைக்காய் | 150 | 100 | 150 | 80-100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 100-280 | 300 | 80-200 | 150 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 140 | 150 |
| பாகற்காய் | 400 | 450 | 600 | 450 | 600 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 250-300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 260 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 100 | 200-250 | 600 |
| லீக்ஸ் | 300 | 350 | 250 | 220 | 300 |
| பீற்றூட் | 150 | 200 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 800 | 500 | 500 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 2300 | 2500 | 1500 | 2000 | 2400 |
| போஞ்சி | 400 | 500 | 500 | 350-400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | 100 | 150 | 240 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 150 | 60-70 | 150 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 | 100-150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 200 | 150-250 | 220-240 |
| இராசவள்ளி | 650 | 450 | 400 | 400 | 700 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 200 | -- | 350 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 120 | 350 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 100 | 50 | 60 |
| ஈரப்பலா | 150 | 100 | 100 | 100 | 250 |

## ஈவினை - மீனாட்சியம்பாள்
## ஆலய வருடாந்த உற்சவப்பெருவிழா

(யாழ்ப்பாணம்)

ஈவினை மதுரையம்பதி ஸ்ரீ மீனாட்சியம்பாள் ஆலய வருடாந்த உற்சவப் பெருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து மஹோற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இரதோற்சவமும், 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நிலாவரை புனித தீர்த்தக்கங்கையில் தீர்த்தோற்சவமும், 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவன உற்சவமும். 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு பிராயச்சித்த உற்சவமும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு வைரவர் சாந்தி உற்சவமும் நடைபெற்று 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சண்டி ஹோமம் உற்சவத்துடன் மஹோற்சவங்கள் நிறைவடையும் என ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ து. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (நி-8)


### கொக்குவில் இந்துக் கல்லூரி
### பழைய மாணவர் சங்கம்(தாய்ச்சங்கம்)
### வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைக்கான வாக்கெடுப்பும்

**எதிர்வரும் 30.03.2025ம் திகதி நடைபெறவிருந்த வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைக்கான வாக்கெடுப்பும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.**

**வருடாந்த பொதுக்கூட்டம்:- 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை, காலை 10.00 மணிக்கு**
**நிர்வாக சபை வாக்கெடுப்பு:- 18.05.2025ம் திகதி பி.ப 1.00 மணிக்கு நடைபெறும்**

கா.சசிகரன்
செயலாளர்

(C-2522)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

### London O/L மற்றும் A/L Chemistry வகுப்புக்கள்

London O/L, London A/L Chemistry வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.
(Edexcel, Cambridge Exam Boards)

15 வருட UK இல் கற்பித்தல் அனுபவம் கொண்ட ஆசிரியர்.

Dr. V. சரவணன்

BSc (UCL. UK), MSc (Univ of London), PhD (UCL, UK)

தொடர்புகளுக்கு **070 683 2430**

(3718)


## யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்
## அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலையில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் - வகை II**

**தகைமைகள்**

- வகை II, பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம் II மற்றும் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை அதிபர் சேவை தரம் II ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் தரம் III அதிபர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.
- விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்று வருட காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கும், பிரதி, உதவி அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனை பொருத்தமற்றது.

**குறிப்பு**

- விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்ப படிவத்தை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தங்களின் வலயக் கல்விப் பணிப்பாளருடாக **2025.04.07** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் **"வயைக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வயைக்கல்வி அனுவகைம், செம்மணி வீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"அதிபர் பதவிக்கான விண்ணப்பம் 2025"** எனக் குறிப்பிடவும்.

(சி-2515)

திருமதி மாலதி முகுந்தன், வலயக் கல்விப் பணிப்பாளர்.
வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம் செம்மணி வீதி நல்லூர்.

## வேலணை பிரதேச சபை
### பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்-27.03.2025

வேலணை பிரதேச சபைக்குச் சொந்தமான பழைய பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. பொருட்களை அன்றைய தினமே காலை 9.00 மணி முதல் பார்வையிட முடியும் என்பதுடன் கேள்வியில் பங்குபற்றுபவர்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி மீளளிக்க முடியாத கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500.00 இனை வேலணை பிரதேச சபையில் செலுத்திப் பற்றுச் சீட்டினை பெற்றுக் கொள்ளல் வேண்டும். கேள்வியில் சித்தியடைவோர் உரிய தொகையினை முழுமையாக செலுத்தி அன்றைய தினம் பி.ப 4.00 மணிக்கு முன்னதாக அலுவலகத்திலிருந்து பொருட்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

**இடம்:- தலைமை அலுவலகம்,**
**வேலணை பிரதேச சபை,**
**காலம்:- 27.03.2025 வியாழக்கிழமை**
**நேரம்:- மு.ப 10.00 மணி**

(சி-2511)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

யிலிருந்து தப்பியோடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் வவுனியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவரே இவ்வாறு தப்பியோடியுள்ளார். (ம-7)

## மாத்தறையில்...

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இரண்டு இளைஞர்களை, வான் ஒன்றில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு துப்பாக்கிதாரர்கள், துப்பாக்கிச் சூட்டை நடத்திய பின்னர் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிதாரர்கள் வந்ததாக சந்தேகிக்கப்படும் வான், துப்பாக்கிச் சூடு நடந்த இடத்திலிருந்து சுமார் 800 மீற்றர் தொலைவில் உள்ள ஒரு கிளை வீதியில் எரிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது. (ம-7)

## ஐஸ் போதைப்...

மான முறையில் யுவதி ஒருவர் நின்று கொண்டிருப்பதாகக் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த யுவதியைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணையில் யுவதியிடமிருந்து ஐஸ் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ம-7)

## சோடா என...

நேற்று உயிரிழந்துள்ளது.

இதில் ஊர்காவற்துறை நாரந்தனை தெற்கைச் சேர்ந்த சதிஷ் சஞ்சித் என்ற ஆண் குழந்தையே உயிரிழந்ததாகும்.

கடந்த 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் இருசக்கர உழவு இயந்திரத்தில் இருந்து டீசலினைப் போத்தல் ஒன்றில் எடுத்த மேற்படி குழந்தையின் தந்தையார் அதனை வெளியில் வைத்துவிட்டு கைகழுவச் சென்றுள்ளார்.

அச்சமயம் வீட்டுக்குள் இருந்த மேற்படி குழந்தை ஓடிச் சென்று போத்தலில் இருந்த டீசலை சோடா என நினைத்துப் பருகியுள்ளது.

இதனையடுத்து மயக்கமடைந்த நிலையில் உடனடியாக ஊர்காவற்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்ட நிலையில் நேற்று சனிக்கிழமை அதிகாலை குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## ஹெரோயின்...

சந்தேக நபர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் நான்கு கையடக்கத் தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன. (ம-7,315)

## விபரீத...

சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார்.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த இராஜேஸ்கண்ணா சஞ்சிகா (வயது-17) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுமி கடந்த 20ஆம் திகதி விபரீத முடிவெடுத்து அதிக மாத்திரைகளை உட்கொண்டுள்ளார்.

இந்நிலையில் அவரது பெற்றோர் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதனைத் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த சிறுமி சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பில் மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7)

## மன்னாரில்...

அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் ஈச்சளவக்கை கிராமத்தைச் சேர்ந்த ஒருவரே உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மூவரும் உடனடியாக மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ம-7,285)

## தலைமன்னார்...

தொடங்கப்பட்டது.

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு போரினால் இந்தக் கப்பல் சேவை 1981ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

இந்தியா - இலங்கை இடையே மீண்டும் கப்பல் போக்குவரத்துத் தொடங்க இரு நாட்டு வெளியுறவுத் துறை மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, 14.10.2023இல் தமிழகத்தின் நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து காங்கேசன் துறைமுகத்திற்குப் பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி காணொளி வாயிலாக தொடங்கி வைத்தார்.

அப்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, "இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்குக் கப்பல் சேவை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

## அவ...

ஊடகம் ஒன்றுக்கான நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"ஜனநாயக அரசியலை மேற்கொண்ட எங்கள் கட்சி, ஐ.தே.க. தொடங்கிய கறுப்பு ஜூலையை அடிப்படையாகக் கொண்டு, அநீதியான மற்றும் சட்டவிரோதத் தடையை அடிப்படையாகக் கொண்டு எங்கள் கட்சியைத் தடை செய்தனர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, நாங்கள் அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்தினோம்.

துப்பாக்கிச் சண்டை நடந்தது. ஒரு உள்நாட்டுக் கலவரம் வெடித்தது. ஆயுதங்களை வைத்து அரசியல் செய்யும்போது, இரு தரப்பினரும் இறக்கின்றனர்.

அதில், எங்கள் தரப்பில் சிலர் நடைபெறக் கூடாத சில விடயங்களைச் செய்திருப்பதை நாங்கள் ஒப்புக்கொண்டுள்ளோம்.

மேலும் பொறுப்பு ஒரு தனிநபரிடம் அல்ல, ஒரு வணிகத்திடம் உள்ளது என்பதை நாங்கள் அறிவோம்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி மாபெரும் படுகொலையைச் செய்து, அறுபதாயிரம் பேரைக் கொன்று, எங்கள் கட்சியைத் தடை செய்து எதிரிகளைக் கொன்ற வரலாற்றைக் கொண்டுள்ளது.

அப்போது அமைச்சர் பதவிகளை வகித்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு இருந்தார். எனவே இந்த உள்நாட்டுக் கலவரத்தின் பொறுப்பு, அதைத் தொடங்கிய நபரிடமே உள்ளது.

நாங்கள் அந்த உள்நாட்டு கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள். நாங்கள் போராட வேண்டியிருந்தது. நாங்கள் சண்டையிட்டோம். உலகம் முழுவதும் அதுதான் நடந்திருக்கிறது.

மக்கள் இருபுறமும் சண்டையிட்டனர். எனக்கு ஆயுதப் பயிற்சி இல்லை. எனக்கு அரசியல் பயிற்சி உண்டு. ஆயுதம் ஏந்த வேண்டியிருந்தபோது நாங்கள் ஆயுதம் ஏந்தினோம் என்றார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.03.22 — சீட்டிழுப்பு இலக்கம் 5783 — D 7 4 6 1 4 4
அத சம்பத — D 6 1 4 4 — சீட்டிழுப்பு இலக்கம் 0358

தன நிதானய — திகதி 2025.03.22 — சீட்டிழுப்பு இலக்கம் 1813 — O 06 17 21 71 O — Double Chance 74970

மெகா பவர் — திகதி 22/03/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2131 — T 05 08 27 63 69

ஜய — திகதி 2025.03.22 — சீட்டிழுப்பு இலக்கம் 051 — S 4 8 7 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4025 — சீட்டிழுப்பு திகதி 22.03.2025 — V 19 30 73 79 — V

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.03.22 — சீட்டிழுப்பு இலக்கம் 1092 — தனுசு 06 32 36 47 தனுசு — 05909 — 13

உத்தியோகபூர்வ முடிவுகள் — 22.03.2025 — வெற்றி வாரம் 491 — T 3 6 0 2 4 9 — 83460 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.34,048,694.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2757 — சீட்டிழுப்பு திகதி 2025.03.22 — தினம் சனிக்கிழமை — 04 31 71 76 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,459,501.60

சனிதா — திகதி 22.03.2025 — வெற்றி வாரம் 4918 — 02 14 33 39 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,846,670.80 — 62533

சசிரி — 648 — 22.03.2025 — சனிக்கிழமை — 21 29 34 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4469 — சீட்டிழுப்பு திகதி 22.03.2025 — தினம் சனிக்கிழமை — 17 19 26 44 — மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,529,456.00 — 103241

U 07 12 46 50 74 — 1933 — 22.03.2025 — சனிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.569,368,181.40

அத கோடிபதி ADA KOTIPATHI — சனிக்கிழமை — வெற்றி வாரம்: 2583 — சீட்டிழுப்பு திகதி: 2025.03.22 — 19 43 58 67 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,912,288.00 — 838395


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் ஒரு அருமருந்து, சீனிக்குப் பதிலாக தேனைப் பயன்படுத்துவதனால், இரத்தத்திலுள்ள சீனியின் அளவு சீராகி கொலஸ்ரோலின் அளவு குறையும். இதயநோய் தாக்காது. உடல் எடை குறையும். இவ்வாறு பல பயன்களைக் கொண்டது.

Royal

# றோயல் சுத்தமான தேன்

உங்கள் முழுக் குடும்பத்தின் ஆரோக்கியத்தினைப் பாதுகாத்திட இன்றே பாவியுங்கள் றோயல் சுத்தமான தேன்.



**ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.**

குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும், சுப்பர்மார்க்கட்களிலும், பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
குறிப்பு : (சத்திரத்துச்சந்திக்கு அருகாமையில்)
தொ.பே : 021 2222 567

Packed By:- Royal Industries® (C-2518)

## ஆசிரியர்கள் தேவை

G.C.E A/L (English / Tamil Medium)

- ♦ Biology ♦ Chemistry
- ♦ E-Tech ♦ ICT

தகுதி : முன் அனுபவம் உள்ள பட்டதாரிகள் விரும்புவோர்

070 686 7695/ 076 897 6665

தொடர்பு கொண்டு நேரில் வரவும். (947)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்

- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மாவிட்டபுரம்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2519)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

- ♦ சம்பளம் 60,000/-
- ♦ உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- ♦ வயதெல்லை 33 - 55

தொடர்புகளுக்கு :
075 498 5400, 077 937 0000
021 221 7600 (949)

## தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணத்தில் வீடு, காணி விற்பனைக்குள்ள உரிமையாளர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

076 311 9485
076 050 3863 (953)

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு, புதிய செம்மணி வீதியில் 2 ¼ பரப்புக் காணி

**விற்பனைக்குண்டு**

- கல்வியங்காட்டு சந்தியிலிருந்து 350 மீற்றர்
- நல்லூர் கந்தசுவாமி கோவிலிருந்து 1.7Km

077 185 4870

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சியில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
077 711 1716
076 860 4501 (3733)

## மணமகள் தேவை

யாழ். இந்து திருவோண நட்சத்திரம், கனடாவில் மெக்கானிக்கல் (M.Sc) எஞ்சினியர் பணி புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

077 050 1434
077 148 1960 (942)

## மாதாந்த வாடகைக்கு கார் தேவை

அலுவலக பணி புரியும் எனக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் தனிப்பட்ட பாவனையிலுள்ள பட்ஜட் (Budget) கார் தேவை.

077 295 2365 (3721)

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள பலாலி வீதியிலிருந்து 40m தொலைவில் HNB வங்கிக்கும் Sunway Supermarket க்கும் மிக அருகில்

- வெட்டுக்கிணறு
- சுற்றுமதிலுடன் கூடிய
- ஒரு குடும்பம் வசிக்கக்கூடிய வீட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு : 077 690 1708 (3709)

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் வேலைவாய்ப்பு

தொடர்புகளுக்கு :
077 120 1137 (3730)

## விற்பனைக்கு

ஒஸ்ரேலியன் கிறாஸ், மலேசியன் கிறாஸ் புல் இனங்கள் விற்பனைக்கு உண்டு.

சிற்றி பாம், மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.

075 944 4601 (3717)

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- ♦ பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்.
- ♦ 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ♦ உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது.
- ♦ கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- ♦ பயன் தரும் தென்னைகள் உள்ளன.
- ♦ நல்ல சுற்றுச் சூழல், குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ♦ நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- ♦ ஒரு பரப்பின் விலை 64 இலட்சம்.
- ♦ தரகர் தேவையில்லை.
- ♦ பார்வையிடும் நேரம் :
  காலை 6 மணி தொடக்கம்
  மாலை 6 மணி வரை

(3714)

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389, 077 986 5457

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%

- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு : (907)

075 033 6759

## மணமகள் தேவை

யாழ். இந்து 1992 இல் பிறந்த கொழும்பில் தொழில் புரியும் சொந்த வீடு, சொந்த வியாபாரஸ்தலங்கள் உள்ள 3 மாதத்தில் விவாகரத்தான (குழந்தைகள் அற்ற) மணமகனுக்கு சாதி, வேலை, சீதனம் தேவை இல்லாத திருமணம் முடிக்காத மணமகள் தேவை. (941)

077 906 1527

## பணிப்பெண் தேவை

பருத்தித்துறையில் உள்ள வீடொன்றில் வீட்டு வேலைகளைச் செய்து இரண்டு பிள்ளைகளைப் பராமரிக்க பணிப்பெண் தேவை.

வயது : 40 - 50

பணி நேரம் : காலை 7.00 – மாலை 5.00 (943)

077 459 7938
075 712 7528

## நாவலர் வீதியில் காணி விற்பனைக்கு

நாவலர் வீதியில் உள்ள Tct க்கு முன் உள்ள வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)

076 742 4301
077 710 9638 (3724)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 222/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 268/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 412/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg பொன்னி | - 243/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 250/= | |
| 1Kg கடலை | - 399/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 788/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 220/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2870/= | ~~3000/=~~ |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 220/= | |
| 1Kg சோயா | - 380/= | |
| 01 ஓசன் மீன்ரின் | - 380/= | ~~560/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 170/= | ~~240/=~~ |

400g Anchor — Max 01 — 1000/= ~~1050/=~~



அங்கர் யோகட் — 50/= ~~80/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (952)

Happy Supermarket
0777 8080 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.